SUPPLEMENT TO THE "CATHOLIC GUARDIAN"

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: CATHOLIC PRESS JAFFNA.

Telephone: NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

75-ம் புத்தகம் 15-ம் இல. யாழ்ப்பாணம் 1950-ம் ஆண்டு சித்திரைமாசம் 20-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## பாத்திமாவின் சிறுவர்கள்

1916-ம்ஆண்டு கோடைக் காலம். போர்த்துக்காலிலேபாத்திமாகிராமத்தில் மூன்றுபிள்ளைகள் வழக்கம்போல அதிகாலையில்எழுந்து, சிற்றுண்டிஅருந்தி, ஆடுகளைமேய்க்கப் புறப்பட்டார்கள். லூசி, யாசிந்தா, பிரான்சீஸ்என்பன அவர்கள் நாமங்கள். லூசிக்கு ஒன்பதுபிராயம். யாசிந்தாவுக்கு ஆறு. பிரான்சீசுக்கு எட்டு. லூசியுடைய தந்தையின் சகோதரிபிள்ளைகளே யாசிந்தாவும் பிரான்சீசும். ஆடுகளைப் புல்வெளிகளில்விட்டபின் அன்று விளையாடக்கூடியமுறைகளைப்பற்றி அவர்கள் தர்க்கம் பண்ணிக்கொண் டிருந்தார்கள். அப்போதுமழைதூற ஆரம்பித்தது. அவர்கள் ஓர்கெபிக்குள்ளே ஒதுக்கிடம் தேடினார்கள். மழையோ வெகுநேரம் பெய்துகொண்டிருந்தது. மத்தியானமானபோது வீட்டிலிருந்து கொண்டுவந்த றொட்டியையும். பழங்களையும் சாப்பிட்டனர், மழையும்சற்றுஓய்ந்தது. பிரான்சீஸ் விளையாட விரும்பினான். ஆனால் லூசி: "இப்போது மத்தியானம்; கிராமத்திலே செபமாலைசொல்லுகிறநேரம். நாமும் இப்போது செபமாலைசொல்ல வேண்டும்"என்றாள். பிரான்சீசுக்கு அவளின்வார்த்தைகள் பிடிக்கவில்லை. கோயிலுக்குப் போகிறதிலும், செபமாலைசொல்லுகிறதிலும் அவன் அவ்வளவு கவனஞ்செலுத்துகிறவனல்ல, அவைகள் கிழவிகளுடையவும். பெண்பிள்ளைகளுடையவும்காரியமென்றே அவன் கருதியிருந்தான். ஆயினும் லூசியின் வார்த்தையைமீறத் தைரியமில்லை. அவனும் கையிற்செபமாலையெடுத்துச் 'சீக்கிரம்முடிக்க வேண்டும்; அப்புறம் என்னுடன் வீட்டைக்கட்டவேண்டும்'என்றான். வீடுகட்டும்விளையாட்டே அவனுக்குமிகவும் பிரியமானது.

ஆனால், அவர்கள் செபமாலையைப்பத்தியோடு சொன்னார்களென்று சொல்லமுடியாது. ஏதோஒருவாறு சொல்லிச் சீக்கிரம் முடித்துவிட்டார்கள். செபமாலைமுடிந்தும் மழைபெய்துகொண்டிருந்தமையால் கதைகள்சொல்லி நேரம்போக்கினார்கள்.

திடீரென ஓர்புயல் எழும்பிற்று. அதேசமயத்தில் ஓர் அற்புதகாட்சியை அவர்கள்கண்டார்கள். கெபிக்கு எதிரேயிருந்த ஒலிவமரத்தில் ஒளி ஒன்று வீசியது. அந்த ஒளியிலிருந்து ஓர்வாலிபர் வெளியில் வந்தார். கோயிலிலே படங்களில் காணப்படும் சம்மனசுகளின்உடையைப்போல் அவர் உடைதரித்திருந்தார். பிள்ளைகள் பயந்துபோனார்கள். "பயப்படாதீர்கள், நான்சமாதானத்தின்சம்மனசு"என்றார் வாலிபர். பிறகு முழந்தாட்படியிட்டு "என்னோடுசேர்ந்து வேண்டிக் கொள்ளுங்கள்"என்றார். பிள்ளைகள்அப்படியேசெய்தார்கள். அவர்சொல்லியசெபத்தை அவர்களும் சொன்னார்கள். சம்மனசு சொன்னதாவது "என்சர்வேசுரா நான்உம்மை விசுவசிக்கிறேன். உம்மை ஆராதிக்கிறேன். உம்மில் நம்பிக்கைவைக்கிறேன். உம்மைநேசிக்கிறேன். உம்மைவிசுவசியாமலும், உம்மைஆராதியாமலும், உம்மில் நம்பிக்கைவையாமலும், உம்மை நேசியாமலும் இருக்கிறவர்களுக்காக உமதுமன்னிப்பை இரந்து கொள்ளுகிறேன்" இவ்வாறு மும்முறைவேண்டினபின் "இப்படியே வேண்டிக்கொள்ளுங்கள் யேசுவினுடையவும், மரியாயினுடையவும் இருதயங்கள் உங்கள்வேண்டுதல்களை ஏற்றுக் கொள்ளும்" என்று சொல்லி மறைந்தார். பிள்ளைகள் வீட்டிற்குச்சென்றும் பயத்தால் அக்காட்சியைப்பற்றி எவரிடமும் பேசவில்லை.

நாட்கள்பல கடந்தன. மீண்டும்சமாதானத்தின் சம்மனசு அவர்களுக்குத் தோன்றிற்று "வேண்டிக்கொள்ளுங்கள். அதிகமாக வேண்டிக்கொள்ளுங்கள். யேசுவினுடையவும், மரியாயினுடையவும் இருதயங்கள் நீங்கள்செபிக்க வேண்டுமெனக் கோருகின்றன. செபங்களையும், தியாகங்களையும் தொடர்ந்து சர்வேசுரனுக்குஒப்புக்கொடுங்கள்" என்று சொன்னது. "நாங்கள் எப்படித் தியாகங்களைச்செய்வோம்?"என்று லூசி கேட்டதற்கு "நீங்கள்செய்கிற அனைத்தையும் பாவிகள் மனந்திரும்பவும் சருவேசுரனுக்கு வருத்தம் வருவிக்கும் பாவங்களுக்குப் பரிகாரமாகவும் ஒப்புக்கொடுங்கள். இங்ஙனம் நமதுநாட்டில் சமாதானம் உண்டாகக்கடவது" என்று சம்மனசு பதிலளித்தது. "நானே போர்த்துக்காலின் காவற்சம்மனசு. நான்சொல்லுகிறது உங்கள்ஞாபகத்தில் எப்போதும் இருக்கவேண்டும். சர்வேசுரன் உங்களுக்குஅனுப்புகிற எல்லாக்கஷ்டங்களையும் பொறுமையுடன்ஏற்றுச் சகிக்க வேண்டும்"என்றுங்கூறி மறைந்துபோனது. சம்மனசு அவ்வளவுசீக்கிரம் மறைந்ததுபற்றி அவர்கள் விசனப்பட்டார்கள். என்றாலும் திரும்பவும் வருவாரென்று நம்பியிருந்தார்கள். அந்தவருடக் கடைசியிலே சம்மனசு அவர்களுக்கு மீண்டும்தோற்றினார்.



இம்முறை சம்மனசின் கைகளில் ஓர்பூசைப்பாத்திரமும், ஓர்ஒஸ்தியும் இருந்தன. ஒஸ்தியிலிருந்து இரத்தத்துளிகள் பூசைப்பாத்திரத்தில் விழுந்திருந்தன. சம்மனசு அவைகளைத்தாங்கியிருந்த கைகளை எடுத்தபிறகும் அவைகள் கீழே விழாமல் ஆகாயத்தில்நின்றன. அப்போது சம்மனசு முழந்தாட்படியிட்டு: "பிதா சுதன் இஸ்பிரீத்துசாந்துவாகிய மகாபரிசுத்த பரமதிரீத்துவமே! அத்தியந்த தாழ்ச்சிவிநயமாய் உம்மை ஆராதித்து, உலகத்திலேயுள்ள சகலநற்கருணைப் பேழைகளிலும் எழுந்தருளியிருக்கின்ற எங்கள் ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதருக்கு விரோதமாகச் செய்யப்படும் நிந்தை அவமானங்களுக்கும், தேவதுரோகங்கள், அனாசாரங்களுக்கும்பரிகாரமாக அவருடைய மகாவிலையேறப் பெற்ற திருச்சரீரத்தையும், திருஇரத்தத்தையும், ஆத்துமத்தையும். தேவசுபாவத்தையும் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன். யேசுவின் மகாதிவ்வியமான இருதயத்தினுடையவும், மரியாயின மாசற்ற இருதயத்தினுடையவும் அளவில்லாதபெறுபேறுகளைப்பார்த்துப் பாவிகளைமனந்திருப்பவேண்டுமென்று தேவரீரை இரந்துமன்றாடுகிறேன்" என்று செபித்தார். இந்தச் செபத்தைப்பிள்ளைகளைக்கொண்டும் சொல்லுவித்தபின் சம்மனசானவர் எழுந்து தேவநற்கருணையை லூசியா உட்கொள்ளும்படியும், பாத்திரத்திலிருந்த திருஉதிரத்தைப் பிரான்சீசும் யாசிந்தாவும் உட்கொள்ளும்படியும் கொடுத்து: "யேசுவின் திருச்சரீரத்தையும், திருஇரத்தத்தையும் உட்கொள்ளுங்கள்! பாவிகளின்பாவங்களுக்குப் பரிகாரஞ்செய்து, உங்கள் தேவனுக்கு ஆறுதல் உண்டுபண்ணுங்கள்"எனச்சொன்னார். இவ்விதமாகச் சம்மனசானவர் தேவதாயின் வருகைக்கு அவர்களைத் தயார்பண்ணிய பிறகுதான் தேவதாயாரும் 1917-ம்ஆண்டு வைகாசிமாதம் 13-ந்திகதி முதன்முதலாக அவர்களுக்குத் தரிசனையானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஸ்குத்திருநாள் ஆசீர்வாதம்

## பாஸ்குத்திருநாள் ஆசீர்வாதம்

அர்ச். பேதுருவானவர் ஆலயத் தலைவாயிலுக்குமேலாய் உயரத்திலுள்ள யன்னல்மாடியில் நின்றுகொண்டு பரிசுத்தபாப்பரசர் சென்ற 9-ந்திகதி பாஸ்குத்திருநாளன்று தமது ஆசீர்வாதம் அருளுமாறு கரங்களைஎடுத்தபோது ஐந்துலட்சம் சனங்கள் கீழே மவுனமாக முழந்தாட்படியிட்டிருந்தார்களெனத் தந்திச்சமாச்சாரம் எட்டலாயிற்று. பின்னர்அவர் முந்தத் தமக்குக்கீழே நூறு அடி தூரத்தில் நெருங்கிநின்றவர்களை நோக்கியும், பிந்த அர்ச். பேதுருவானவர் ஆலயத்திற்குமுன்பாகவுள்ள வட்டமானபெரிய மைதானத்தினூடாக மூன்றிலொரு மைல்தூரம்வரையிலும், தைபர்நதிக்குச்செல்லும் அகன்றபாதைநீளமும் தேங்கிப்போயிருந்த பிரமாண்டமான சனத்திரளைநோக்கியும் தமதுகைகளை உயர்த்திக் காட்டியபோது அவர்களெல்லாம் ஆனந்தக்கூச்சலுக்குமேல் கூச்சலிட்டு ஆர்ப்பரித்தார்கள். நகருக்கும் உலகத்துக்குமாக—“ஊர்பி எற் ஓர்பி” எனும் ஆசீர்வாதத்தைப் பாப்பரசர் அருளியபோது, கத்தோலிக்க திருச்சபையின் பரிசுத்தவருடத்தை உச்சநிலைக்குக்கொணர்ந்த மனவருட்சிக்குரிய பாஸ்குத்திருநாள் கொண்டாட்டங்கள் முடிபுக்குவரலாயின. உலகமுழுவதிலுமிருந்துபோய் அர்ச். பேதுருவானவர் ஆலயத்தில் குழுமியிருந்த 50,000 யாத்திரிகர்களும் பாப்பரசர் பெரியபாடற்பூசை நிறைவேற்றுதற்காகக் கருஞ்சிவப்புவர்ணச் சிம்மாசனத்திலே தோள்உயரத்தில் தூக்கிச்செல்லப்பெற்றதைக் கண்ணுற்றார்கள். மூன்றுமணிநேரத் திருவைபவ முழுவதிலும் 74 வயசுடையவரான பாப்பரசரை அவரதுவைத்தியரான டக்றர் றிக்கார்டோ கலீஸி-லிஸி அவர்கள் கவனித்துக்கொண்டிருந்தார். தங்கக்கைபிடியிட்ட கருமரப்பெட்டிஒன்றில் ஆரம்பசிகிச்சைக்குரிய உபகரணங்களை ஏந்திக்கொண்டு ஏவலாள் ஒருவன் நின்றான்.

## பரிசுத்தவருட யாத்திரிகர்கள்

பரிசுத்தவருடப்பலன்களை அடைந்துகொள்வதற்காகத் தற்போது தினமும் இரண்டாயிரம்பேருக்கு மேற்பட்டவீதமாக யாத்திரிகர்கள் ரோமாபுரிபோய்ச் சேர்ந்துகொண்டிருப்பதாக வத்திக்கானிலிருந்து தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. பாஸ்குப்பெருநாள் திருச்சடங்குகளை ஆரம்பமாகக்கொண்டு அவர்கள் இவ்வாறு பெருந்தொகையாக அங்கு சரியத்தொடங்கினார்கள். பரிசுத்தவருடத்தின் பத்து அர்ச்சியசிஷ்டபட்ட திருவைபவங்களில் கடைசியானவைபவம பரிசுத்தபாப்பரசரால் நடத்திவைக்கப்படவிருக்கும் ஆடிமாதம்வரையில் இவ்விதம் யாத்திரிகர்கள் அங்கு சென்றுகொண்டிருப்பார்கள். பாப்பரசரது பேட்டிபெற ஆசிக்கின்ற சனங்களின் தொகை அத்தனைபெரிதாய் இருப்பதாலே வத்திக்கான் அரண்மனையில் வழமையாக அருளப்படும் பொதுப்பேட்டிகள் அர்ச். பேதுருவானவரின் மகா ஆலயத்துக்கு மாற்றப்படவேண்டிய நிலைமைஏற்படலாயிற்று. அதிலே அவர் வாரம்ஒருமுறை 25,000 பேருக்குக் குறையாத யாத்திரிகர்களின் பெருங்கூட்டங்களுக்குப் பேட்டியருளுகின்றார். அத்துடன் தினமும் தமது அரண்மனையிலே சிறுபேட்டிகளும் அருளுகின்றார்.

## மனந்திரும்பிய கம்யூனிஸ்தர்

இத்தாலியதேச பெருசாமாகாணத்திலே பலவருடகாலம் ஓர்கம்யூனிஸ்த தலைவராயிருந்த அபென் சமபெரோ என்பவர் சென்றபங்குனிமாசம் 26-ந்திகதி பேசியபோது: கம்யூனிஸ்தகட்சியிலிருந்து தாம் விலகிவிட்டதாகவும், சந்நியாசமடம் ஒன்றில்சேர்ந்துகொள்ளத் தாம்மனுப்பண்ணியிருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார். இத்தாலியிலே சமீபகாலத்தில்நிகழ்ந்த கம்யூனிஸ்த கலகங்களைத்தொடர்ந்து தமக்கு ஓர் மனச்சாட்சிக்கண்டனம் உண்டுபட்டதாகவும், அதனால் தம்மைமுழுவதும் சமயத்தொண்டுக்கென அர்ப்பணஞ் செய்யத் தீர்மானித்ததாகவும் அவர் கூறியிருக்கின்றார். கம்யூனிஸ்தகட்சியிலிருந்து விலகுமுன் இவர் பெருசா மாகாணத்திலே மகா ஆவேசம்படைத்த ஓர்கம்யூனிஸ்தபிரசாரகரெனக் கருதப்பட்டுவந்தார்.

## குஷ்டரோகரான குருவானவர்

பிஜிதீவிலே குஷ்டரோகர்களைப் பரிபாலித்துவருகிறவரும், பலவருடகாலமாக ஓர்குஷ்டரோகராய் இருந்துவருகிறவருமான வண. லேயோ லெஜென் சுவாமியார் சமீபத்திலே தமதுகுருத்துவ தங்கயூபிலியைக் கொண்டாடினார். சுவாசிஎனுமிடத்திலே இவர் ஓர்குருமடம் ஸ்தாபித்திருக்கின்றார். இதிலுள்ள குருத்துவ மாணவர்கள்எல்லாருமமுன்னர் அங்கே மனுமாமிசபட்சணிகளாயிருந்த சாதிகளின் சந்ததியில் பிறந்தவர்கள். இவர்களில் முதல்மாணவர் 1939-ம்ஆண்டு குருப்பட்டம் பெற்றார். 1935-ம்ஆண்டு வண. லேயோ லெஜென் சுவாமியாருக்குக் குஷ்டரோகம் உண்டாயிற்று. என்றாலும்இவர் அங்கேமிகவும் ஊக்கமாகத் தொண்டாற்றிவரும் மிஷனரிமார்களில் ஒருவராய் இன்றுமே விளங்குகின்றார். அங்குள்ள சாதிகள் மத்தியில் என்றுமே அதிகமான மனந்திரும்புதல்களால் இவரது அப்போஸ்தலத்துவம் ஆசீர்வதிக்கப்பெற்றிருக்கிறது.

## இந்திய ஆகாயயாத்திரை

பம்பாய்நகரிலிருந்து இந்திய யாத்திரிகர்கள் 26 பேர் இம்மாசம் 6-ந்திகதி ஆகாயவிமானம்ஒன்றிலே ரோமாபுரி செல்லலாயினர். இவர்கள் பாஸ்குத்திருநாளுக்கு முன்னதாக அங்கு போய்ச் சேரலாயினர். இக்கோஷ்டியிலே பம்பாயைசேர்ந்த இருகுருப்பிரசாதிகளும் இருக்கின்றனர். இவர்களில் ஒருவரான வண. பிலோமினோ டாகுருஸ் சுவாமியவர்களே இக்கோஷ்டியின் ஞானவிசாரணைத்தலைவராக நியமனஞ்செய்யப்பெற்றுள்ளார். இந்தியதேசியயாத்திரைக் கம்மிற்றியின் ஆதரவில் ரோமாபுரிக்கும், ஐரோப்பாவின் மற்றும்விசேஷப்பட்ட இடங்களுக்கும்இந்தியாவிலிருந்துசென்றுள்ள உத்தியோகமுறையான முதல் யாத்திரிகர்கோஷ்டி இதுவாகும். இது தவிர இம்மாசம் 18-ந்திகதியாகிய சென்றசெவ்வாய்க்கிழமை 27 பேரைக்கொண்ட மற்றோர்யாத்திரைக்கோஷ்டியும் ஆகாயவிமானம்ஒன்றில் சென்றிருக்கிறது. இம்மாதம் 28-ந்திகதியன்றும் மற்றுமோர் யாத்திரைக்கோஷ்டியை இந்தியாவிலிருந்து ஓர் விமாத்தில் ரோமாபுரிக்கு அனுப்பி வைப்பதற்கான ஆயத்தம் நடைபெறுகின்றது. நிற்க, 40 பேரைக்கொண்ட இந்தியயாத்திரிகர் கோஷ்டிஒன்றும் இம்மாதம் 17-ந்திகதி ‘மாலோஜா’ எனும் கப்பலிலே பம்பாயிலிருந்து பிரயாணமாயிருக்கிறது. இதன் ஞான விசாரணைத்தலைவர் பங்களூரைச் சேர்ந்த வண. ஆர். எவ். யோசெவ் சுவாமிஅவர்கள்.

## பாப்பரசரின் விடுமுறை

ரோமாபுரிக்குவரும் யாத்திரிகர்கள் தம்மைக்காணமல் திரும்பிப்போகாதிருக்கும்படியாகப் பரிசுத்தபாப்பரசர் காஸ்ரெல் காண்டொல்போவிலுள்ள தமதுகோடைகால மாளிகையில் வழமையாகத் தாங்கிக்கும் இருமாச விடுமுறையையும் இவ்வருடம் நிறுத்திப்போடத் தீர்மானித்திருக்கின்றார். அவர் ஆடி, ஆவணிமாதங்களில் வெப்பம் மிகஉக்கிரமாய் இருக்கும்போது ரோமாபுரிக்குவெளியே சஞ்சரிக்கும் வழக்கமுடையவர். ஆனல், தமது டக்றரின் கண்டிப்பான கேள்வியின்பேரிலே ஆவணிமாத இறுதியிலும், புரட்டாசிமாத ஆரம்பத்திலுமாக மூன்றுவாரம் காஸ்ரோல் காண்டொல்போவில் பூரணஇளைப்பாற்றியெடுக்க இசைந்திருக்கின்றார். அப்போது பரிசுத்தவருடத்தின் பிரதான திருவைபவங்கள் பூர்த்தியாகிவிடும்.

## பழச்சத்து

பழங்கள் நல்ல போஷணைகொண்ட உணவுகளுள் விசேஷமானவையாம். அதுமாத்திரமன்றி, அவற்றின் சாறுகள் மனுஷதேகத்திற்கு இயற்கையில் விசேஷ அவுஷதங்களென்றும் வைத்தியசாஸ்திரிகள் கூறுகின்றார்கள். இந்த வகையில், தோடம்பழம், எலுமிச்சம்பழம், திராட்சப்பழம் மூன்றும் முதன்மையானவையாம். இப்பழங்களின்சாறுகள் காற்றினாலும் சூரிய உஷ்ணத்தினாலும் இயற்கையிலே அவுஷதங்களாகத் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இயற்கைசம்பந்தமான காற்றும், சூரிய உஷ்ணமும் வைத்தியர்போற் பழச்சாறுகளை விசேஷ அவுஷதங்களாக்குகின்றனவென்பது வெளிப்படையாகும்.

பழச்சாறுகள் வித்தியாசமான குணங்களுள்ளன. சில பழச்சாறுகளுக்குப் பலநோய்களை வராமற்தடுக்குஞ் சக்தியுண்டு. வேறுசிலசாறுகள் வந்தநோய்களைப் போக்குந் தன்மையுடையன. மற்றையஉணவுகளைச் சீரணமாக்குஞ்சக்தி பழச்சாறுகளுக்கிருப்பதால், உணவில் வெறுப்பைப் பழச்சாற்றினால் நிவிர்த்திசெய்யலாம். கிருமிகளை எதிர்க்கும்படியானசக்தியை உடலுக்கு அளிப்பதிற் பழச்சாறுகள் மேன்மையுள்ளவைகளாகும். சீவசத்துப்பொருளைத் தேகத்தில் வளர்ப்பதும் பழச்சாற்றின் விசேஷதொழிலாயிருத்தலின், சீவசத்துப்பொருட்குறைவினற் சரீரத்திலுண்டாகுஞ் சருமநோய்கள் பழச்சாற்றினலே இலகுவில் நீங்குகின்றன. சொறி, கரப்பன், சிரங்கு முதலியநோய்களை நீக்கும்வல்லமை பழச்சாற்றுக்கு உண்டென்பது இதனற் தெளிவாகுமன்றோ! அந்தநோய்களை நீக்குவதுமாத்திரமன்றி, அவைநீங்கியபின் தேகத்தை அழகுறச்செய்வதும், சர்மத்தைத் தூய்மைப்படுத்துவதும் பழச்சாற்றின் குணமாகும். பழச்சாற்றுக்குப் பற்களைப்பாதுகாக்குங் குணமுண்டென்றும் வைத்திய ஆராய்ச்சியாளர் கூறுகின்றார்கள்.

பழச்சாறான மருந்துக்கும், வைத்தியர் பக்குவப்படுத்திய மருந்துகளுக்கும் பெருத்த வித்தியாசமுண்டு. தேகசுகமுள்ளஒருவன் வைத்தியர் பக்குவப்படுத்தியமருந்தை உட்கொள்ளுவதில்லை. உட்கொண்டால் உடலுக்கு அதனால் நன்மையேயல்ல, தீமையே உண்டாகின்றது. ஆயின் பழச்சாறான அவுஷதமோ சுகவாளி அருந்தினாலும் அவனுக்கு நஷ்டம் விளைக்கிறதில்லை. சுகத்தைத விருத்தியாக்குவதோடு, தேகத்துக்கு வலிமையையும, செழிப்பையுமுண்டாக்குகிறது.

பழச்சாறுகள் நோயாளிகளும் மற்றெவரும் விருப்பத்தோடு அருந்தத்தக்க சுவையுடையன. மருந்துகளோ, சுவையற்றவைகளும், கைப்பு, கசப்பு, துவர்ப்பு நிறைந்தவைகளுமானவை. இப்படியிருப்பதால் மிகுந்த வெறுப்போடும் கஷ்டத்தோடுமே அவைகளை அருந்தவேண்டியதாகும். ஆயின் பழச்சாறுகளோ, வாய்க்கினிய உணவுகளாவதுமன்றி, அருமையான அவுஷதங்களாகவு மிருக்கின்றன.

பழங்கள் மருந்தாய்ப் பயன்படும் விசேஷத்தை வெகுகாலத்துக்குமுன் நம்முன்னோர் நன்கு தெளிந்திருந்தனர். அக்காலங்களிலே உலர்ந்த உணவுகளைப் புசிப்பவர்க்குண்டாகுஞ் சர்மரோகங்களுக்கு எலுமிச்சம்பழச்சாறு மருந்தாக உபயோகிக்கப்பட்டுவந்தது.

நூறு வருடங்களுக்குமுன்பு பிரித்தானியகடற்படை உத்தியோகஸ்தர்கள் யாவரும் தினமொன்றுக்கு ஒவ்வொரு எலுமிச்சம்பழச்சாற்றை அருந்திவந்தனர். இப்பொழுதோ ஆங்கிலேயர் மாத்திரமன்றி ஐரோப்பாவின் எல்லாப் பகுதியினரும் எலுமிச்சம்பழச்சாற்றை அதிகமாய் மதிக்கின்றார்கள். பொதுவாய்ப் பழவர்க்கங்கள் தற்கால உலகத்தின் எல்லாப்பகுதிகளிலுந் தேகசுகங்கருதி உணவாகமாத்திரமன்றி, அவுஷதமாகவும் அருந்தப்பட்டுவருகின்றன. தோடம்பழச்சாறும் எலுமிச்சம்பழச்சாற்றின் நற்குணங்களையுடையது. இவ்வாறே பழவர்க்கங்களெல்லாம் சௌக்கியத்தைமாத்திரமன்றிப் புஷ்டியையும் செழிப்பையும் தேகத்துக்கு ஊட்டுகின்றனவென்பது ஆராய்ந்துநிதானிக்கப்பட்ட உண்மையாகும்.

## அர்ச். சூசையப்பரின் அருட்சம்பவம்

உற்றிப்பூசுதல்பெற்ற தினத்திலே மேரிகத்தரின யோசேப்பு எனப்பெயர் தரிக்கப்பட்ட இந்தப்புண்ணியசிவியான கன்னியாஸ்திரி சீவியகாலம்முழுதும் சூசையப்பர்பேரிலே தளராதபத்தி கொண்டு விளங்கினாள். பிரான்ஸ் தேசத்திலிருந்து கனடாதேசத்துக்கு அனுப்பப்பட்டு அங்குள்ள குயிபெக் நகர வைத்தியசாலைக்குத் தலைமையாகிப் பலவருடகாலத்தை நோயாளரைக் கரிசனத்தோடும் பராமரிப்பதிலே போக்கிவந்தாள்.

திவ்வியகர்த்தரின் மோட்சாரோகணத்திருநாளான ஓர்நாள் இவள் பரவசமாகி யேசுநாதசுவாமி பெருந்தொகைப்பட்ட சுத்தவாளர் பரிவாரமாகப்புடைசூழப் பரலோகத்துக்கு எழுந்தருளிப்போவதையும், தலைவரிசையிலே அர்ச். சூசையப்பர் கூடிச் செல்வதையும காட்சியிற்கண்டாள். யேசுநாதர் மோட்சபிரவேசமாகிப் பரமபிதாவின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்தருளியபின் சூசையப்பர் தமது திரீத்துவதேவனின் திருச்சந்நிதியை அணுகி, திவ்வியகர்த்தரைச் சுட்டிக் காண்பித்து “திவ்வியபிதாவே! இதோ! பூலோகத்திலே தேவரீர் என்னிடம் நம்பிஒப்படைத்த தலந்து; அவர் இரட்சித்தருளிய இந்தஎண்ணிறந்த ஆத்துமாக்கள் சாட்சியிடுகிறவண்ணம் இருமடங்காகவல்ல, பலமடங்காகப் பெருக்கப்பட்டதாய் அதைமீண்டுந் தேவரீருக்குச் சமர்ப்பிக்கிறேன்” என்றார். நித்தியபிதாவானவர், மாறுத்தரமாக, “பிரமாணிக்கமுள்ள நல்ல ஊழியனே! பூமியிலே நீர் நமதுவீட்டின் பிரமாணிக்கமான காரியாதிகாரியாக இருந்தீர்; இங்கே மோட்சவீட்டிலே காரியாதிகாரியும், ஊழியனுமாயல்ல, ஆண்டவனும் எசமானுமாய் இருப்பீராக; நமது சொந்தக்குமாரனுக்குக் கட்டளையிடும் அதிகாரமேன்மையை நீர் வகித்திருந்தமையினலே நமது சகலசம்பத்துக்களின் மேலும் மகத்தான அதிகாரம்வகித்திருப்பீராக” என்று திருவாக்கருளினார்.

ஈதெல்லாம் கண்டுகேட்ட தாயார் சூசையப்பரைநோக்கி: “சுத்தவாளரே! மகிமையின் இராசாவுடைய அன்பை நான் ஒருபோதும் இழந்துபோகாதபடி அவரிடமெனக்காக மனுப்பேசியருளும்; உமது வேண்டுதல்மூலமாய் அவர் எவ்வித வரப்பிரசாதத்தையும் எனக்கு அநுக்கிரகித்தருளுவாரே” என்றுமன்றாட, அவ, தேவதிருவுளத்திக்குத் தம்மைக்கையளித்து நடக்க ஏலவேசெய்துகொண்ட பிரதிக்கினைப்பிரகாரம் சீவித்துவருகில், அவவுடைய மன்றாட்டம் அருளப்படுமென அவவுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டது. அவ பிரமாணிக்கமாயிருந்தால் மோட்சவீட்டிலே அவவுக்குக்கிடைக்கவிருக்கும்இடமும் அவகண்டுகளிகூரக் காண்பிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாத்திமா நாயகிபால்
# தூதுசெல்லும் மாடப்புரு



[ தற்போது இந்தியாவின் பலவிடங்களிலும் சுற்றுப்பிரயாணஞ் செய்துவருகின்ற பாத்திமா செபமாலைநாயகியின் அற்புத திருச்சுரூபமானது, அடுத்துநிகழும் வைகாசிமாதம் 22-ந்திகதி இரத்மலானை விமானநிலையம் வந்துசேர்ந்து ஸ்ரீலங்காவில் தனது யாத்திரையைத் தொடக்கும். பாத்திமாமாதா லங்காவுக்கு விஜயஞ்செய்யவிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே யாழ்ப்பாணத்திலிருந்து மாடப்புறாவென்று அத்திருஅன்னையிடம் தூதுசெல்கின்றது ]

(முன்தொடர்ச்சி)

அன்னைபதம் அண்மியதும் அன்பொழுக இன்பாயோர்
புன்னகையோ டுன்னைப் புரிந்துகொள்வாள் ஆயினுமே

எங்கிருந்து இங்குவந்தாய் என்றிதமே கேட்பாளேல்
லங்கா விருந்தென்று இனிதே விளம்புவையே

அறியா தவள்போல் அபிநயித்துக் கேட்பாளேல்
சிறிலங்கா வென்று சிறப்பாகச் சொல்வாயே

லங்காவி லெங்கிருந்து என்றுஅன்னை கேட்பாளேல்
அங்குயாழ்ப் பாணமென்று அறைகுவாய் என்புறவே

என்னையோ வந்ததுநீ என்று இயம்புவளேல்
அன்னையே தாயென் றடிபணிந்து சொல்வாயே

பொன்னாடு எங்கள் பொலிந்தவள யாழ்ப்பாண
நன்னாடு நின்வரவால் நயந்துகளி கூருதம்மா

மாதாவின் பக்தி மலிந்தவள யாழ்நாடு
மாதாவே தாய்நின் வரவால் மகிழுதம்மா

திருவாரும் தேம்பொழில்சூழ் செல்வத் தமிழ்நாடு
மருவார்நின் பாத மலர்நாடி நிற்குதம்மா

கலைவளமே எங்கும் கதித்தவள யாழ்நாடு
மலையாய் எழுந்துன் வரவையெதிர் பார்க்குதம்மா

மோட்ச இராக்கினியே முழங்கு தமிழ்நாடு
மாட்சியொடு நின்னை வரவேற்க நிற்குதம்மா

காலையொடு மாலை கருத்தாக மக்கள்செப
மாலைசொல்லித் தாய்நின் வரவைஎதிர் நோக்குகின்றார்

கோவில்சென்று பூசை குறையாது கண்டுதினம்
ஆவலொடு நின்வரவுக் காயத்தம் ஆகுகின்றார்

குடும்ப செபமாலை குறையாது சொல்லி
இடும்பைதவிர் தாயென் றிரந்தாசி வேண்டுகின்றார்

புன்முறுவல் கொள்நின் புனித மதிவதனம்
கண்குளிரக் காணவென்று காதலே கொள்ளுகின்றார்

பாவா லுனைப்புகழ்ந்து பாவலரும் தோத்திரிக்க
ஆவலொடுன் பாத அரவிந்தம் தேடுகின்றார்.

கதிதான் உலகமென்று கண்டதுதான் காட்சியென்று
மதிதான் இழந்தவரும் மனமே திரும்புகின்றார்

துயிலும் பொழுதும் துயிலால் எழும்பொழுதும்
குயில்போல் இசைத்துன் குலவுதுதி பாடுகின்றார்

தாயே தயைக்கடலே தாசருக்குக் கொண்டுவரும்
நேயசெய்தி கேட்க நிதமாசை கொள்ளுகின்றார்

ஆண்டவனின் தூதாய் அகிலமெலாம் யாத்திரைசெய்
ஆண்டவளே என்தூ தறிவா யெனமொழிவாய்

செல்வப் புறாவேகேள் செப்புகிறேன் இன்னுமொன்று
செல்வழியில் நின்றால் திசைமாறிச் சென்றிடுவாய்

செந்நெற் களனிகளைச் செல்வழியிற் கண்டாலும்
தின்ன நினையாது தீவிரமாய்ச் சென்றிடுவாய்

கானமயி லாடுவது கண்முன்நீ கண்டாலும்
காண நினையாது காற்றாய்ப் பறந்திடுவாய்

மல்லிகை முல்லை மலர்சோலை கண்டாலும்
நில்லாதே, நிற்க நினையாதே சென்றிடுவாய்

சாதிப் புறாவினங்கள் சந்திக்க நேர்ந்தாலும்
தூதுசெல்கி றேனென்று சொல்லிப் பறந்திடுவாய்

மதுகர ரீங்காரம் மதிதான் கவர்ந்தாலும்
எதுவிதமும் நில்லாது ஏகுவாய் வேகரமாய்

குயில்கள் இசைபாடிக் கூவி யழைத்தாலும்
மயிலும்! கிளியும்!! மதியாது சென்றிடுவாய்

அன்னம் வழிமறிக்கும் ஆசை மொழிசொல்லும்
என்னதான் சொன்னாலும் ஏமாந்து போகாதே

(தொடரும்)

## சம்பத்திரிசியார் கல்லூரிக்குப்
# பாராட்டுரை

"தினகரன்" ஆசிரியர்

யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார்கல்லூரியின் நூற்றாண்டு விழா வைபவத்தையொட்டிப் பிரதமமந்திரி அனுப்பியுள்ள வாழ்த்துச்செய்தியில், கிறீஸ்தவ மிஷனரிகளின் சேவையும், செல்வாக்கும், அவர்கள் தங்களது மதப்பாடசாலைகளின்மூலமாகப் பரப்பிய கல்வியுமே நாட்டின் முன்னேற்றத்துக்குப் பெரிதும் காரணமாகுமென்று குறிப்பிட்டிருக்கிறார். சம்பத்திரிசியார் கல்லூரிபோன்ற ஸ்தாபனங்கள் பிரதமமந்திரியின் இவ்வித பாராட்டுதலுக்கு முற்றிலும் தகுதியுள்ளவையாகும். சம்பத்திரிசியார்கல்லூரி நூறுஆண்டுகளாக நாட்டுக்கு அரும்பணி ஆற்றிவந்திருக்கிறது. நாட்டின் கலாசார அபிவிருத்திக்கு மட்டுமல்ல, அரசியல்முன்னேற்றத்துக்கும் இக்கல்லூரி பேருதவி புரிந்திருக்கிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே தீண்டப்படாதார் என்போரைக் கல்விபயில அனுமதித்த முதற்கல்லூரி இதுவேயாகும். நாட்டின்எதிர்கால வாழ்வைத்தீர்க்கதரிசனத்துடன் உற்றுநோக்கி அதன் முன்னேற்றத்துக்காக அக்கல்லூரி எடுத்துக்கொண்ட இந்நடவடிக்கைக்கே அது நாட்டுமக்களின் நன்மதிப்பைப் பெறக்கூடியதாக விளங்குகிறது ஆசிரியர்களுக்கு முதன்முதலாகத் தக்கதோர் பென்ஷன்திட்டத்தை ஆரம்பித்ததும் சம்பத்திரிசியார்கல்லூரியேயாகும். அதன்பின் முப்பதுவருடங்களுக்குப் பிறகுதான் அரசாங்கம் ஆசிரியர்களுக்குப் பென்ஷன்திட்டம்ஏற்படுத்தியதுஎன்பது இங்குகுறிப்பிடத்தக்கது. விஞ்ஞானக் கல்விபுகட்ட ஆரம்பித்த கல்லூரிகளிலும் இதுவே முதலாவதாகும். தாய்ப்பாஷையில் கல்வி புகட்ட ஆரம்பித்தகல்லூரிகளிலும் சம்பத்திரிசியார்கல்லூரியும் ஒன்றாகும்என்பது ஈண்டுகுறிப்பிடத்தக்கது. நாட்டின்பொது வாழ்வில் பலதுறைகளிலும் சிறந்துவிளங்குபவர்கள் இக்கல்லூரியில் பயின்றவர்களுமாவர். இன்னும்நாட்டின் நிர்வாகத்தில் உத்தியோகங்கள் வகித்துவரும் ஆயிரக்கணக்கானவர்கள் கல்வி பயின்றதும் இக்கல்லூரியில்தான். இவர்கள்அனைவருக்கும் தக்ககல்வியளித்து இவர்களை வாழ்க்கைக்குப் பக்குவப்படுத்தியபெருமை சம்பத்திரிசியார் கல்லூரியைச் சேர்ந்தது. சம்பத்திரிசியார் கல்லூரியைப் போன்ற ஸ்தாபனங்கள் நாட்டுக்குமிகவும் பயன்படத்தக்கவையாகும். எதிர்காலத்தில் அவற்றின்சேவைகளை நாடுபெரிதும் வேண்டிநிற்கின்றது. விவசாய மந்திரி கூறியதுபோல "நாம் நமதுநாட்டில் சுதந்திரமான சமுதாயத்தை உருவாக்கஎடுத்துக்கொள்ளும் முயற்சியில் மதப்பாடசாலைகளின்உதவி மிகவும் அவசியமாகும்." ஆகவே எதிர்காலத்தில் அரசாங்கம் தனது கல்விக்கொள்கையை எவ்விதமாக வகுத்தாலும் இம்மாதிரியான கல்லூரிகள்மீது அவை எதிர்பார்க்கும்அளவுக்கு அர

சாங்கம் கவனம்செலுத்தவேண்டும். அவற்றின் பெருமைக்குத் தக்கபடி அரசாங்கம் அவற்றை மதித்துநடத்தவேண்டும். இலவசத்திட்டத்தில்சேர்ந்த மதப் பாடசாலைகள் தங்களுக்குப் போதியமான்யம் அளிக்கப்படுவதில்லையென்றும், அதன்பயனை அவை தங்களது உயர்ந்த அந்தஸ்தைப் பாதுகாத்துக் கொள்ளமுடியா திருக்கிறதென்றும் அடிக்கடி புகார்கள் செய்துவருகின்றன. திருத்தியமைக்கப்படும் கல்வித்திட்டத்தில் இம் மதப்பாடசாலைகள் போதிய வசதிகள் பெறும்படியான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். சம்பத்திரிசியார் கல்லூரி போன்ற ஸ்தாபனங்கள் ஏற்கனவே அரும்பெரும் சேவைகள் புரிந்துவந்திருக்கின்றன. அச்சேவைகள் நாட்டுக்குமேலும் தேவை. அரசாங்கத்தின் அசிரத்தைகாரணமாக அவற்றின் சேவைகளுக்கு இடையூறுகள் ஏற்படுமாயின் அதுமிகவும் வருந்தத்தக்கதாகும். நாட்டுக்கும் பெரும்நஷ்டம் என்பதையும்சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## கொழும்புத்துறை
## அர்ச். சூசையப்பரின்
# அடைக்கலத் திருநாள்

இத்திருநாள் வழமைப்பிரகாரம் கொழும்புத்துறைத்தாபனத்தில் அடுத்துநிகழும் வைகாசிமாதம் 7-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை அதிபத்திச்சிறப்பாகக் கொண்டாடப்படும். இத்திருநாளுக்கு சமுகந்தரும்படி அர்ச். சூசையப்பர் பக்தர்களையும், கொழும்புத்துறை பழையமாணவர்களையும் அன்பாய் அழைக்கின்றோம்.

வைகாசிமாதம் 6-ந்திகதி சனிக்கிழமைமாலை 7-30 மணிக்கு மாலை ஆராதனை.

வைகாசிமாதம் 7-ம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6-30 மணிக்குப் பாடற்பூசையும், மாலை 4-30 மணிக்கு மாலைஆராதனையும் அதனைத் தொடர்ந்து திருச்சுரூபசுற்றுப்பிரகாரமும், திவ்வியசற்பிரசாதஆசீர்வாதமும் நடந்தேறும்.

தாபனத்தலைவர்

# பிரியாவிடை வைபவம்

நிகழும் 11-4-50 காலை 9 மணியளவில் புங்குடுதீவுக் கத்தோலிக்கநிருவாக மகாசபையின் பரிபாலகரும், அர்ச். பிரான்சீஸ் சவேரியார்கோவில் கட்டளைக்குரவருமான வண. லோர்சன் சுவாமியார் அவர்கட்குச் சபையரால் ஓர் பிரியாவிடை அளிக்கப்பட்டது. சபைத்தலைவர் திரு. கிறிஸ்தோ அவர்கள் பூமாலைசூட்டினர். காரியதரிசி திரு ச. அ. மனுவேல்அவர்கள் ஓர்பிரியாவிடைச்செய்தி கூறினர். பின்னர் சுவாமியவர்கள் தமதுநன்றியைத்தெரிவித்துப் பேசுகையில், இச்சபை ஸ்தாபிக்கப்பட்டபின் உங்கள் கோவில் பலவாறு சீர்திருத்தப்பட்டிருப்பது பாராட்டத்தகுந்தது; நீங்கள் எல்லோரும் இதனை ஐக்கியத்துடன் கொண்டு நடத்தி இன்னும் உங்கள் கோவிலுக்கு வேண்டிய உதவிகளைச்செய்யப் பிரயாசப்படுவீர்களென நம்புகிறேன்; தேவன் உங்கள்அனைவரையும் ஆசீர்வதிப்பாராக எனக்கூறினர் அதன்மேல் பிரதிமைப்படம் பிடிக்கப்பட்டுப் பிரியாவிடைவைபவம் முடிவுற்றது.

சபைக்காரியதரிசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**சித்திரைமாதம் 1950**

வெ 21 அர்ச். அஞ்சேல்மர், மே. வேதபா.
சனி 22 அர்ச். சொத்தேரும், கையுசுவும் பா. வே.
ஞா 23 கர்த்தர் உத்தானத்தின் பின் வரும் 2-ம் ஞாயிறு — அர்ச். ஜோஜியார், வே.
திங் 24 அர்ச். சிக்மாரிங்காபிதேலப்பர், வே.
செவ் 25 அர்ச். மாற்கு, சு.
புத 26 அர்ச். சூசையப்பர் திருச்சபையின் பாதுகாவலர்
வியா 27 அர்ச். கனிசியுஸ் இராயப்பர், கு.

1950-ம் ஆண்டு
சித்திரைமாதம் 20-ந் திகதி

சத்தியவேத
பாதுகாவலன்

## மானிப்பாய் ஆஸ்பத்திரி

"வடலங்காவிலே மானிப்பாய் எல்லவராலும்நன்கறியப்பெற்ற தொன்ருகும். மற்றவர்களின் ஆனந்த சுகவாழ்விற்காக இந்த ஆஸ்பத்திரியிலே தங்களை அர்ப்பணஞ்செய்த பரோபகாரசீலர்களுக்கு எத்தனையோ மக்கட் சந்ததிகள் ஆழ்ந்த அன்பும், நன்றியறிதலும உவகையுடன் பாராட்டிவருகிருக்கின்றன. இந்தஸ்தாபனம் வடபால்வாழும் மக்களது வாழ்க்கையின் பின்ன பேதப்படாது ஒன்றுபட்ட ஓர் பாகமாகிவிட்டது. இந்த ஆஸ்பத்திரியை அவர்கள் எவ்வளவாகப்போற்றிப் பாராட்டுகிருர்கள் என்பது, ஆயிரக்கணக்கான மக்கள் இதில்கொண்டிருக்கும் நம்பிக்கையினுலும், அவர்கள் பெற்றுவரும் சேவையினுலும் அதிகம்பிரத்தியட்சமான வகையிலே தினமுங் காண்பிக்கப்படுகிறது. இந்த ஸ்தாபனத்திலே அவர்களது ஆழ்ந்த அன்புக்கும் பாராட்டுகைக்கும் உண்மைக் காரணம், சிருஷ்டிகர்த்தாவின் பிள்ளைகளுக்குச் சேவைசெய்ய வேண்டுமென்ற ஆசையை ஊழியர்களிடம் தூண்டிவிட்ட அந்த நோக்கமேயாகும்" என்று அமெரிக்க இலங்கை மிஷனிலே அடியிடப்பெற்ற கிறீன் ஞாபகார்த்த ஆஸ்பத்திரி நூற்ருண்டுவிழாவின் இரண்டாவது தினக் கொண்டாட்டத்திலே நம்துணை மேற்றிராணியாரான மகா வந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர் அவர்கள் கூறிய பொன்மொழிகளையே இந்த வேளை நாமும் அதன் நூற்ருண்டுவிழாவில் மீட்டும் எடுத்துக்கூறி அதற்குச்சோபனங் கூறுகின்ருேம.

இந்த ஆஸ்பத்திரியின் நூற்ருண்டுப் புதிய கட்டிடத் திறப்பு விழாசென்ற 11-ந்திகதிபெருமிதமாக நடந்தேறியது. இப்புதிய கட்டிடத்திலேசமீபத்தில் அமைக்கப்படவிருக்கும் நவீன வைத்தியசாதனங்களும் அமைக்கப்பட்டுவிடின் இலங்கையிலே சிறந்த வைத்தியசாதனங்களைக் கொண்ட ஆஸ்பத்திரிகளில்ஒன்ருய் இது திகழ்வதாகும். இக்கவேளை மானிப்பாய் ஆஸ்பத்திரியிலே போற்றற்பால அருந்தியாகங்களுடன் புகழ்ச்சிக்குரிய வைத்தியதொண்டாற்றித் தங்கள்புகழுடம்பு நிறுவியுள்ளவர்களை நாம் நினைவுகூரவேண்டியவர்களாகின்ருேம்.

1847-ம் ஆண்டு டக்றர் சாமுவேல் கிறீன் அவர்கள் யாழ்ப்பாணம்வந்துசேர்ந்து இங்கே அதிகம் மத்தியமான ஓர்தானமாகிய மானிப்பாயில் தமது வைத்தியசேவையை ஆரமபித்தார். எக்காலத்திலாவது இலங்கைக்குவந்தடக்றர்மார்களிலெல்லாம் இவர் மகாமேம்பட்டவர். தமது நாமந்தாங்கிய ஆஸ்பத்திரியை இவர் அடியிட்டு நடத்தியது மாத்திரமல்ல, ஆனல், 1850-ம் ஆண்டு யாழ்ப்பாணத்திலே அரசாங்கஆஸ்பத்திரிஒன்றை ஆரம்பிக்க வடமாகாண ஏசன்றருக்குத் தம்மாலான துணைச்செய்து பின்னர் 1873-ம் ஆண்டு அமெரிக்காவுக்குத் திரும்புகிறவரையில் அதனைத் தரிசித்து வைத்தியசேவையாற்றும் டக்றராகவும் இருந்துவந்தார். இன்னும் டக்றர் கிறீன் அவர்கள் மேலைத்தேசவைத்திய சாஸ்திரத்தில் இங்குள்ளார்க்குப் பயிற்சியளிக்கவும் தொடங்கினர். அப்போது அரசினர் வைத்திய கல்லூரி கொழும்பில் இருக்கவில்லை. இவரிடம் பயிற்சிபெற்றவர்களே இலங்கைமுழுவதிலும் அரசினரின் ஆஸ்பத்திரிகளில் டக்றர்மாராக நியமனம்பெற்ருர்கள். மேலைத்சேசவைத்திய அறிவைத் தமிழ்ப்பாஷை படித்தவர்கள்தானும் பெறத்தக்கதாக இவர் தமிழ்ப்பாஷையை நன்குகற்று, தமது காலத்திலிருந்த பிரதான வைத்தியமுறைகளை அப்பாஷையில் இசைத்தெழுதினர். இவரும், இவருக்குப்பின் 1893-ம் ஆண்டுவந்த வைத்தியதம்பதிகளான டக்றர் ரி. பி. ஸ்கொட், டக்றர் மேரி ஸ்கொட் என்பவர்களும், பின்னர் 1923-ம் ஆண்டுவந்த டக்றர் வில்லியம் ஜேம்சன் அவர்களும் தங்கள மகத்தான வைத்தியதிறமையாலும், தலைசிறந்தவைத்திய சேவையாலும் மானிப்பாய்ஆஸ்பத்திரிக்கு மங்காப்புகழைசூட்டி வைத்துப்போயிருக்கின்ருர்கள். இவர்களிடமும், ஏனையோரிடமும் வைத்தியசகாயம்பெற்ற யாழ்ப்பாணமக்கள்லட்சக்கணக்கானோரெனலாம். அதனல்இந்த ஸ்தாபனத்தின்மட்டில் நமக்குள்ள கடமைப்பாடு பெரிதென்க!

## செபமும் யுத்தபயமும்

யுத்தங்கள்நிகழ்ந்து அதிகமானகலக்கமும் அங்கலாய்ப்பும் எழுகின்றகாலங்களிலே செபஞ்செய்யுமாறு சனங்கள் கேட்கப்பட்டதும், அக்கேள்விக்கிசைந்து அவர்கள்நடந்திருப்பதும் நாம் கவனித்ததே. தங்கள்நிலைமை மிகமோசமாகிக்கொண்டு வரும்போது மக்கள் கடவுளின்பக்கமாகத் திரும்புகிருர்கள். அங்ஙனம்அவர்கள் கடவுளைத்தேடும்படியாக வழிதிறந்துவிடுவது என்ன? பயப்பிராந்தியே. தற்சமயம் மற்றுமோர்தரம் மனுக்குலத்தவருள்ளே ஒருபெருந்தொகையினர்மத்தியில் பெரும் பயப்பிராந்தி தலைகாட்டியிருக்கிறது. அதாவது, மனிதன் நவமாகக் கண்டுபிடித்திருப்பவைகள் அவனது கட்டுப்பாட்டுள் அடங்காது மேற்கொண்டு போவதையிட்டும், தனதுசொந்த அழிவுக்கென்றே அவன் நாசகருவிகளைச் செய்துகொண்டிருப்பதையிட்டும் எழுந்திருக்கும்பயப்பிராந்தியேயாகும். இதுசெபஞ்செய்யும்படி, கடவுளைக்கையெடுத்துப் பிரார்த்திக்கும்படியாக மக்களைச்செய்துவிடுகின்றது. மனிதருக்குமனிதர் தப்பிக்கொள்ள வழியில்லாமல் போகுமிடத்து அவர்கள்இருதயம் தப்பும்வழிக்காக அளவற்றவல்லமையுள்ள கடவுள்பால் எழுகின்றது.

அமெரிக்கஐக்கியதேசத்திலே கிறீஸ்தசபைகளில் எதனையும் சாராத கோவில்ஒன்றிலே பிரமாண்டமான ஓர்மெழுகுவர்த்தி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதென்றும், அது எரிந்துகொண்டிருக்கிறவரையிலே மக்கள் அதனைச் சூழவிருந்து தேவதயாளத்தையும், தேவபராமரிக்கையையும் இரந்துசெபஞ்செய்வார்களென்றும் அறிவிக்கப்படுகிறது. கிறீஸ்தசபைகளின் உலகசங்கமானது கடவுளிடமாக மக்கள்திரும்பும்படியாகப் பரிந்துகேட்டுச் செய்திவிடுத்திருப்பதாக ஜெனிவாநகரிலிருந்து அறிவிக்கப்படுகிறது. யுத்தம்ஒன்று தொடங்கப்போகின்றதென்பதும், அணுக்குண்டோ அன்றேல் சலவாயுக்குண்டோ சமஸ்த அழிவைக் கொண்டுவருமென்பதுமே புதியபயப்பிராந்தியின் காரணமாகும். சலவாயுக்குண்டைக் கண்டுபிடிப்பதிலே கூடச்சேர்ந்து வேலைசெய்துகொண்டிருந்த விஞ்ஞானிகளில்ஒருவரே தமக்குண்டான பயத்தை வெளியிட்டனரெனில் பின்னர் பேசுவானேன்? அதனல்இவரும் செபத்திலே சேர்ந்துகொண்டாலோ! ஏனெனில், இப்புதியபயங்கரத்தை உண்டுபண்ணுவதில் இவரும் உடன்நின்று துணைச்செய்திருக்கிருர் அன்ருே!

சோவியற் ருஷியாவிலிருந்து பற்றிப்படர்ந்த நாஸ்திகசமதர்மமும், லோகாயதமும் மக்கள் கடவுள்பால் மனதைத்திருப்புவதைத்தடுத்து, அவர்களது அகக்கண்களை மாத்திரமல்ல, முகக்கண்களையுமே மறைத்துக் கொண்டுவருகின்றன. அதனல் அவர்கள் அவரைவிட்டுத் தூர அகன்றுபோகின்ருர்கள். அக்காலத்திலே தேவப்பிரசைகளான இசிறவேல்சனங்கள் தேவனைமறந்து பாவாக்கிரமங்கள் புரிந்துவந்த காலங்களில் எல்லாம்தேவன் அவர்களை யுத்தங்களாலே தண்டித்தார். வேற்றரசர்கள்சென்று அவர்கள் நாட்டின்மேல் படையெடுத்து அவர்களை அடிமைகளாய்ப்பிடித்துச்சென்றுபலவிதநட்டணைகளையும் அவர்களுக்குச்செய்ய விட்டுவிட்டார். பின்னர் அவர்கள் மனந்திரும்பித் தங்கள்பாவாக்கிரமங்களுக்காக அழுதுபுலம்பிச் செபத்தாலும், தபத்தாலும், கண்ணீராலும் தங்களைப் புனிதப்படுத்தி மன்னிப்புக் கேட்டபோதெல்லாம் கருணைநிதியானகடவுள் மனமிரங்கி அவர்களைச்சிறைமீட்டு, திரும்பவும் அவர்கள்நாட்டில் குடியேற்றிப் பாக்கியமாக வாழவைத்தார்.

இன்றும்மனுக்குலம் தன்னைச் [illegible]ட்டித்துப் பரிபாலித்துவருகின்ற கடவுளைமறந்து பாவாக்கிரமே தனது சந்தோஷபாக்கியமென நினைந்து தாறுமாருக நடந்துவருவதாலே அதற்கோர் தண்டனையும், எச்சரிக்கையுமாகப் பயங்கரயுத்தபீதி அகிலமெங்கும் பரந்திருக்கிறது. யுத்தத்தையிட்டு மனிதசமூகம் முழுவதுமே பயப்பிராந்திகொண்டதாய்க் காணப்படுகின்றது. இந்தவேளை பாத்திமாநாயகி நாடுநாடாகத் திருயாத்திரை செய்து அவர்கள் கடவுள்பக்கமாகத் திரும்பும்படியும், செபத்தாலும், தபத்தாலும் தேவகோபதண்டனைக்குத் தப்பித்துக்கொள்ளும்படியும் மக்கள் அனைவரையும் மன உருக்கத்துடன் கேட்டுக்கொண்டுவருகின்ருர். ஆதலால் நம்தேவஅன்னையின் குரலொலிக்குச் செவிசாய்ப்போமாக!

## பாஸ்குத் திருநாளுக்குப்பின் 2-ம் ஞாயிறு

**சுவிசேஷ வாசிப்பு**
(அரு. 10: 11—16)

அக்காலத்தில் யேசுநாதர் பரிசேயரைநோக்கிச் சொன்னதாவது: நானே நல்லஆயன்; நல்ல ஆயன் தன்ஆடுகளுக்காகத் தன்உயிரைக் கொடுக்கிருன். ஆனல் கூலிக்காரனும் ஆடுகளைச் சொந்தமாய்க்கொண்டிராத மேய்ப்பனும், ஓநாய்வருகிறதைக்கண்டு ஆடுகளைவிட்டு ஓடிப்போகிருன். ஓநாய் ஆடுகளைக்கடித்துச் சிதறடிக்கும். கூலியாளோவெனில் கூலிக்காரனுய்இருக்கிறதினுலும், ஆடுகள் மட்டில் அவனுக்கு அக்கறை இல்லாததினுலும் ஓடிப்போகிருன். நானே நல்லமேய்ப்பன். பிதா என்னை அறிகிறதுபோலவும், நானும்பிதாவை அறிகிறதுபோலவும் நானும் என் ஆடுகளை அறிகிறேன்; என் ஆடுகளும் என்னை அறிகின்றன. மேலும் என் ஆடுகளுக்காக என்சீவனைக் கொடுக்கிறேன். இந்த ஆட்டுக்கிடையைச்சேராத வேறேஆடுகளும் எனக்குஉண்டு. அவைகளையும் நான்கூட்டிக்கொண்டு வரவேண்டும். அவைகளும் என் குரற்சத்தத்தைக்கேட்கும். அப்போது ஒரே ஆட்டுக்கிடையும் ஒரேமேய்ப்பனும் உண்டாயிருக்கும்என்று திருவுளம்பற்றினர்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

— க்ஷயரோகத்தை விரைவிலே நிதானித்துக் கண்டறிந்து தகுந்த சிகிட்சை அளிப்பதிலே அதிகம் உதவியாய்இருக்கக்கூடிய இரத்தப்பரிசோதனைக்கருவிஒன்றை நியூயோக் நகரிலுள்ள மொன்ரேபியோர் ஆஸ்பத்திரியைச்சேர்ந்த டக்றர் சிட்னி ருேத்பாட் அவர்கள் நவமாகக்கண்டுபிடித்துச்செய்து மிகவும் அனுகூலம் அடைந்துவருகிருர்.

— லண்டனிலிருந்து நியூயோக் நகருக்கு ஏழுமணிநேரத்திலே ஒரே பாய்ச்சலில் செல்வதற்காகக் கட்டப்பட்டுவந்த "பிளையிங் ஹோட்டல்" எனும்விமானம் தயாராகிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது. 130 தொன் நிறைகொண்ட இந்த இராட்சதவிமானத்தில் 100 பேர் பிரயாணஞ்செய்யலாம். இதில் எட்டு எஞ்சின்கள்உண்டு. இதனைக்கட்டிமுடிக்க ஐந்துவருடம் பிடித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துண்டு துணுக்கு

புதிய சல்போன் மருந்துகொண்டு குஷ்டரோகத்தைக் குணமாக்குவதில் கண்டுள்ளசித்தி அத்துணைபெரிதாய் இருப்பதானது வைத்திய அதிகாரிகளுக்குப் புதியபிரச்சினை ஒன்றை உண்டுபண்ணிவிட்டிருக்கிறது. வெளி உலகில் தங்கள்வாழ்க்கையைத் திரும்ப நடத்தக்கூடியவர்களாய்த் தற்போது குணமடைந்திருக்கும் பழையகுஷ்டரோகிகளை என்னசெய்வது என்பதே அப்பிரச்சினையாகும். உதாரணமாக, மலாய்நாட்டுக்குஷ்டரோகிகளுள் அநேகர் சீனர்கள். இவர்களிலே குணமடைந்தவர்களை இவர்கள் குடும்பத்தினரும், இனசனரும் அவ்வியாதிக்குப் பயந்து தங்கள் வீடுகளில்ஏற்றுக்கொள்கிருர்களில்லை. இவர்களில் அநேகர் குஷ்டரோகரின் குடியேற்றதலங்களில் பத்துவருடத்துக்குமேல் இருந்தவர்கள். குவாலாலம்பூருக்குச் சமீபமான பெரிய குடியேற்றதலம் ஒன்றில் 300 குஷ்டரோகிகள் சல்போன் மருந்துச் சிகிச்சையைத்தொடர்ந்து நிரந்தரமாகக்குணமடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிருர்கள். இவர்களிற் சிலர் அதிலே இருபதுவருடகாலம் இருந்தவர்கள். இழவுகொண்டாடப்படவேண்டிய இவர்கள் சுகமடைந்து புத்துயிர்பெற்றிருக்கிருர்கள்; அவர்களிலிருந்து இனிமேல் அது தோற்றமாட்டாதென்றுசொல்லி அதிகாரிகள் அவர்களின் குடும்பத்தினர், இனசனரைச் சமாதானப்படுத்தி வருகின்ருர்கள்.

* * *

பம்பாயிலே பூரணமதுவிலக்கை இம்மாசம் 6-ந் திகதி இந்திய பிரசாதிபதியாகிய டக்றர் இராஜேந்திர பிரசாத் அவர்கள் உத்தியோகமுறையில் ஆரம்பித்துவைத்தார். அவர் அன்று சௌபாத்தி கடற்கரையிலே திரளானசனங்கள் கூடியசமுகத்தில் ஆற்றியசொற்பொழிவில் கூறியதுவருமாறு: "இந்திய தேசியகாங்கிரஸின் தேர்தல்வாக்குறுதிகளில் பூரணமதுவிலக்கும்ஒன்ருகும். மக்கள் பூரணஆதரவுஅளிக்கவேண்டிய சமூகசீர்திருத்தங்களில் இதுவும் ஒன்ருகும். மதுவிலக்கில் மகாத்மாகாந்தி அதிகசிரத்தை எடுத்துக்கொண்டார். பூரணமதுவிலக்கு மகாத்மாவுக்கு மிகவும்பிரியமான காரியமாகும்.

* *

1947-ம்ஆண்டு கப்ரின் வில்லியம் ஓடம்எனபவர் ஓர்விமானத்திலே 73 மணி 5 நிமிஷம் 11 செக்கனில் உலகத்தைச்சுற்றிவந்து உலகப்பிரசித்திபெற்றனர். அங்ஙனமாகத் திரு. பிக்ஸ்பிஎன்பவரும், இவர்பாரியாரும் அவரைக்காட்டிலும் குறைந்தகாலத்திலே உலகத்தைச் சுற்றிவருமாறு இம்மாசம் 1-ந்திகதி சனிக்கிழமை ஓர்விமானத்தில் கலிபோணியாவில் இருந்து புறப்பட்டுவந்து கல்கத்தாநகர் சேர்ந்தபோது எஞ்சினில் பழுதுஏற்பட்டமையால் நாலுநாள் அங்குதங்கவேண்டியோராயினர். அதனுல் இவர்களின்பிரயாணம் தடைப்பட்டு நோக்கமும் பிழைத்துவிட்டது. தம்பதிகள் இருவரும் சென்ற 7-ந்திகதி கல்கத்தாவிலிருந்து பிரயாணப்பட்டபோது: எங்கள்பிரயாணத்தைத் தொடக்கிய இடமாகிய சான் பிரான்சீஸ்கோநகர் போய்ச்சேர்ந்து ஒருவாரத்துள்திரும்பவும் ஓர்தரம் தீவிரகெதியில் உலகத்தைச்சுற்றிவர விருப்பதாகத் தெரிவித்துப்போயிருக்கின்றனர். அதேவிமானத்தில்தானே திரும்பவும் அவர்கள் தங்கள் பிரயாணத்தை நடத்துவார்களாம்.

* * *

பிரித்தானியிலே சமீபத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் கம்யூனிஸ்தகட்சியினரின்பாடு பெரும் விழுகையாயிற்று. அவ்வாருகப் பிரித்தானிய வர்த்தக ஐக்கியஇயக்கத்திலே கம்யூனிஸ்த பலத்திற்கு இன்னமும் எஞ்சியிருந்த அரணை இடங்களில் ஒன்ருகிய கிளாஸ்கோநகரிலும் அதன்பாடு

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ் சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ் சபை மாதாந்தக்கூட்டம் சித்திரை மாதம் 28-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் அர்ச். ஞானப்பிரகாசியார் கூட்டச்சாலையில் நடைபெறும். வைகாசிமாதத்தில் அங்கத்வர்கள் பரிபூரணபலன்களை அடையக்கூடிய தேதிகளாவன:—17, 18 (2), 19, 20, 21, 30, 31. நிபந்தனைகள் வழமைப்பிரகாரம். பின்வரும் தேதிகளில் பொதுப்பாவமன்னிப்பு அடையலாம்:—18, 28

A. S. Francis of Mary
for Director

பெரும் விழுகையாகிவிட்டது. இந்த நகரம்நெடுங்காலமாக கம்யூனிஸ்த துறைமுகமென்றும், கம்யூனிஸ்த கைத்தொழில் மத்தியதானமென்றும் அறியப்பட்டுவந்தது. ஸ்தலவர்த்தக சங்கங்களைக் கம்யூனிஸ்தர் தங்கள் ஆதிக்கத்தில் கொண்டுள்ள பிரித்தானியின் மூன்றுபெரியநகரங்களில் ஒன்ருக நெடுங்காலமாக இந்தநகரும் இருந்துவரலாயிற்று. ஆனுல் இப்போது கிளாஸ்கோநகர வர்த்தகசங்கத்தின் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரியப்பெற்று இம்மாதம் 8-ந் திகதி தங்கள்பதவிகளைக் கையேற்றவர்களில் கம்யூனிஸ்தர் ஒருவர்தானுமில்லை. 20 புதிய நிர்வாகசபை அங்கத்தவர்களில் ஆக நாலு கம்யூனிஸ்தரே இருக்கின்ருர்கள்.

* * *

ஸ்பானியஅரசின் தலைவரான ஜெனறல் பிருங்கோஅவர்களின் ஏக புத்திரியான 23 வயசுடைய கார்மனுக்கும், மார்க்குயிஸ் டே வில்லாவேர்டே பிரபுவுக்கும் மதிரித்நகருக்குச் சமீபமான எல்பார்டோ எனுமிடத்திலுள்ள மணவாளியின் பெற்ருரது மாளிகைக் கோவிலிலே இம்மாசம் 10-ந் திகதியன்று திருமணம் நிறைவேறியது. மணவாளன் மதிரித்நகரில் ஓர் டக்றராக உத்தியோகம்பார்த்துவருகின்ருர். இவர் க்ஷயரோக சிகிச்சையில் நிபுணர். பிருங்கோஅவர்களின் புதல்வி தான் ஒருபோதும் மணஞ்செய்வதில்லையென்றும், தனது பிதாவைக்கவனிப்பதிலேயே கருத்தாய் இருந்துவருவதென்றும் சொல்லிவந்தாள். இவள் குதிரையேற்றத்தில் முதற்தரமான பயிற்சிபெற்றவள். மதிரித்நகரிலே பிரஸ்தாபமாக அறியப்பட்டவள். அரசியலுக்கு வெளியே எப்போதும் நின்றபோதிலும் பெண்கள் அரசியல் இயக்கத்தில் மிகுந்த கரிசனையுடையவள். வாய்ச்சாலமாகப் பேசுந் திறமை வாய்ந்தவள்.

* * *

இந்தியாவின் காற்பங்கு அதாவது எட்டரைக்கோடி இந்தியமக்கள் இன்று பூரண மதுவிலக்கை அனுட்டிக்கின்ருர்கள். சென்றவருடம் ஐப்பசிமாதத்திலே ஐந்துகோடிமக்களைக் கொண்ட சென்னைமாகாணம் பூரண மதுவிலக்கை ஏற்படுத்திக்கொண்டது. அதனைத்தொடர்ந்து நிகழும் சித்திரை மாதம் 1-ந் திகதி தொடக்கம் மூன்று கோடிமக்களைக்கொண்ட பம்பாய் மாகாணமும் பூரணமதுவிலக்கை ஏற்படுத்திக்கொண்டது. இந்தியாவின் மேற்குக்கடற்கரைப் பிரதேசத்திலுள்ள சௌராஷ்ட்ரா சமஸ்தானத்தில் இம்மாதம் 5-ந்திகதிமுதல் பூரண மதுவிலக்கு நடைமுறைக்கு வந்திருக்கிறது. இத்துடன் இந்தியாவின் சனத்தொகையில் காற்பங்கு அதாவது எட்டரைக்கோடிமக்கள் மதுஅரக்கனிலிருந்து விடுதலைபெற்றிருக்கின்றனர். சமீபத்திலே தென்னிந்தியாவில் ஒருமாதகாலம் சஞ்சாரஞ்செய்து திரும்பியஒருவர் அப்பகுதிகளில் மருந்துக்குத்தானும் மதுபானம் கிடைப்பது அருமையென்றும், மதுவிலக்குச்சட்டம் கடுமையாக நடைமுறையில் இருந்துவருகிறதென்றும் தெரிவிக்கின்ருர்.

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

வெயில்அகோரமாய் எறிக்கிறதாயினும், இடையிடையே ஏற்படும் மந்தாரத்தாலும், இளந்தென்றல்வீசி வருவதாலும் அகோரம்சாந்தியாகின்றது. சம்பத்திரிசியார் கல்லூரி நூற்ருண்டு விழாக்கொண்டாட்ட காணிவலையும், பொருட்காட்சியையும், மின்சாரதீபாலங்காரச் சிறப்பையும் கண்டுகளிப்பதற்காக யாழ்ப்பாணக்குடாநாட்டின் நாலுபகுதிகளிலிருந்தும் தேர்த்திருவிழாவிற்குப்போல மக்கள்சரிந்துகொண்டிருப்பதும் ஓர்காலநிலையாகும்.

### பாத்திமா சுரூப வரவேற்பு

பங்களூரிலிருந்து அடுத்தவைகாசி மாதம் 22-ந்திகதி இலங்கைவந்துசேரவிருக்கின்ற பாத்திமாநாயகியின் திருச்சுரூபத்தை வரவேற்பதற்கும், மேற்றிராணிமார்களால் அங்கீகரிக்கப்பெற்றபடி பல்வேறு மேற்றிராசனங்களிலும் சுற்றுப்பிரயாணத்துக்குமான ஏற்பாடுகளைச்செய்வதற்கென்று கொழும்புக் கத்தோலிக்க மேற்றிராசன ஐக்கிய சங்கம் சமீபத்தில் ஓர்விசேஷகூட்டம் கூடி ஓர்கம்மிற்றியைத் தெரிவுசெய்திருக்கிறது. இந்தக்கம்மிற்றியின் தலைவராகச் செனற்றர் சிற்றம்பலம் ஏ. காடினர் அவர்களும், இணைக்காரியதரிசிகளாக லெவ்ரினன்ட்—கேர்னல் அன்ரன் முத்துக்குமாருஅவர்களும், கொம்மான்டர் றூயிஸ் டே மெல் அவர்களும், பொக்கராகத் திரு. ரி. ஜே. யோசெவ் அவர்களும் தெரியப்பெற்றிருக்கின்ருர்கள்.

### வண. லெபோன் சுவாமியார்

யாழ்ப்பாணம், சந்தியோகுமையோர்கோவில் கட்டளைக் குருவாக இருந்துவந்தவரான வண. ஏ. லெபோன்சுவாமியவர்கள் நாளை நின்று வரும் சனிக்கிழமை கொழும்பிலே கப்பலேறித் தமது சுவநாடாகிய பிராஞ்சுதேசஞ் செல்லவிருக்கின்ருர். அவர் சென்றதிங்கட்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து பிரயாணமாகுமுன் அக்கோவிலைச்சேர்ந்த திருஇருதயக் கூட்டவாலிபர்களும், தெரேசம்மாள் கூட்டப் பெண்மணிகளும், ஏனைய கிறீஸ்தவர்களும் சுவாமியவர்களுக்குப் பிரிவோபசாரம்நடத்திப் பிரியாவிடை கூறி றெயில்வேஸ்ரேஷனுக்கு அழைத்துச்சென்று அவரைப்பயணமனுப்பிவைத்தார்கள். இவர்சிந்தாத்திரையாகச் சென்று சுகசேமத்துடன் மீளவும் எம்மத்தியில்வந்துசேரத்திருவருளை இரந்துகொள்ளுகின்ருேம்.

### மோட்டர்சைக்கிள் விபத்து

ஓர் மோட்டர் சைக்கிளில்சென்றுகொண்டிருந்த கந்தையா வைத்திலிங்கம் என்பவர் வழியில்ஏற்பட்ட விபத்தில் அடைந்தகாயங்களாலே சென்ற திங்கட்கிழமை யாழ்ப்பாண அரசினர் பெரியஆஸ்பத்திரியில் இறந்துபோயினர். இவருடன் அந்தமோட்டர் சைக்கிளில் பின்புறமாகஉட்கார்ந்து சென்றசின்னத்தம்பி வைத்திலிங்கம் என்பவர் கடூரகாயமடைந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலே யாதும் பேசிக்கொள்ளமுடியாதவகையில் சீவாபாயமான நிலைமையில்இருந்து வருகிருர்.

### காங். விமான நிலையம்

காங்கேசன்துறை விமானநிலையத்தில் தற்போது விமானங்களிலிருந்து இறங்கும் பிரயாணிகளும், விமானங்களில் ஏறும்பிரயாணிகளும் தங்குவதற்குத் தகுதியான ஓர் இடமில்லாமையால் பெருங்கஷ்டம் இருந்துவருகிறது. அங்கு இராணுவத்தினிடமிருந்து எடுக்கப்பட்ட கட்டிடத்திலே பிரயாணிகள் தங்குவதற்குக் கிடைக்கக்கூடியஇடம் ஓர்விருந்தை மாத்திரமே; இந்தவிமானநிலையத்தில் தினமும் நான்குவிமானங்கள் இறங்குவதால் பிரயாணிகளின் தொகை அதிகரித்திருக்கிறது. இன்னும் தாகத்துடன் களைத்துவரும் பிரயாணிகளுக்கு ஓர் [illegible] இல்லை. அதனுல் அங்கு ஓர்புதிய கட்டிடம் அமைக்க ஏயர் சிலோன் தீர்மானித்திருக்கிறது. இப்புதியகட்டிடம் மூன்றுமாதகாலத்துள் பாவனைக்குத் தயாராகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### தங்கத்தின் விலைக்கட்டுப்பாடு

இலங்கையிலே தங்கத்தின்விலை இவ்வருடம் முடிவதற்குள் கட்டுப்படுத்தப்படுமென்று வர்த்தகமந்திரியார் திரு. எச். டபிள்யு, அமரசூரிய அவர்கள் யாழ்ப்பாணத்திலே தம்மைக்கண்டு பேசிய ஓர் தூதுக்கோஷ்டிக்குத் தெரிவித்திருக்கின்ருர். யாழ்ப்பாணப்பெரும்பிரிவிலுள்ள கிராமச்சங்கங்களின் சங்கதலைவரான திரு. ஏ. டி. வேதாபரணம் அவர்கள் தலைமையிலே இங்குள்ள தங்கப்பாவிப்பாளர்பேரால் சென்ற 13-ந் திகதி தூதுக்கோஷ்டி ஒன்று யாழ்ப்பாண றெஸ்ற்ஹவுஸில் வர்த்தக மந்திரியாரைக் கண்டுபேசியபோது அவர் இவ்வாறு அறிவிக்கலாயினர்.

### றெயில்பாதை தகர்க்கப்பட்டது

மட்டக்களப்பு றெயில்பாதையிலே சென்றவெள்ளிக்கிழமை இரவு வாழைச்சேனைக்கும், வெலிகந்தைக்குமிடையில் இருறெயில் தண்டவாளங்கள் "டைனமைற்" வெடிவைத்துத் தகர்க்கப்படலாயின. அதனுல் ஏறக்குறைய 60 அடி நீளமான றெயில் பாதை முற்ருகச் சேதமடைந்தது. அப்பகுதியைச்சேர்ந்த சில மீன்பிடிகாரர் "டைனமைற்" பாவியாது தடுக்கப்பட்டமையால்கோபங்கொண்டு றெயில்வேக்கு நஷ்டம்ஏற்படும்வகையில் தங்கள்ஆத்திரத்தைத் தீர்த்துக்கொண்டதாகச் செய்திபரந்திருக்கிறது. விடுமுறைகால உல்லாசத்தால் தூண்டப்பட்ட சிலவிஷமிகள் அவ்வாறு செய்திருக்கலாமென்றும் கருதப்படுகிறது.

### மோட்டர்கார்விபத்து

சென்றஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் வட்டுவாவிலிருந்து கொள்ளுப்பிட்டியைநோக்கிச் சென்றுகொண்டிருந்த கார்ஒன்று தல்பிட்டியாஎனுமிடத்தில் விபத்துக்குள்ளாய்ப் புரண்டமையாலே அதிற்சென்றவர்களில் டி. ரி. இளம்பெருமா, கே. லோறென்ஸ் பெறேராஎனும்இருவரும் அந்தஇடத்தில்தானே கொல்லப்பட, வேறுஇருவர் கடூரகாயமடைந்தனர். இந்தக்காரில் சென்றஐவரும் புதுவருடப்பிறப்பையிட்டு வட்டுவாவிலுள்ள ஓர் சிநேகிதரைச் சந்தித்துக்கொண்டு திரும்பியபோது இந்தப்பரிதாபவிபத்து ஏற்படலாயிற்று.

### தபார்பஸ் புரண்டது

மஸ்கேலியாவிலிருந்து சென்ற ஞாயிற்றுக்கிழமை அவிசாவலையை நோக்கித்திரும்பிச்சென்றுகொண்டிருந்த தபார்பஸ் 37-ம்மைல் கட்டையிலே பாதையைவிட்டுவிலகிப் புரண்டமையால் அதிற்சென்ற பிரயாணிகள் 22 பேரும் அதன்கீழ் அகப்பட்டுக்கொண்டனர். சாரதி வெளியே குதித்துப்பாய்ந்து தப்பிக்கொண்டான். 10 பிரயாணிகள் காயமடைந்தனர். இவர்களில் 7 பேர் கடூரகாயமடைந்தனர்ஆயினும் இருவர் சீவாபாயநிலையில் இருக்கின்றனராம்.

### செலவிலும் கூடியவருமானம்

சென்றபங்குனிமாசத்திலே நமது அரசினருக்குக் கிடைத்தவருமானத்தில் செலவுக்குக்கண்டு 47,57,119 ரூபா எஞ்சியிருக்கிறது. அம்மாசத்தில் கிடைத்தவருமானம் 4,56,65,596 ரூபா. செலவு 4,09,08,477 ரூபா. வழமைபோலத் துறைமுகவருமானத்தால் முதற் பெருந்தொகையாக 2,31,95,063 ரூபா வருமானம்கிடைத்திருக்கிறது. வழமைபோலக் கல்விப்பகுதிக்கும், சுகாதாரபகுதிக்கும் மிகப்பெருந்தொகையாக 56,75,679 ரூபா செலவேற்பட்டிருக்கிறது. சென்ற மாசத்தில் றெயில்வேயால் ஏற்பட்ட நஷ்டம் 14,18,000 ரூபாவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இளங் குழந்தை

அதன் பால்பங்கீட்டை எப்பொழுதும் விரும்புகிறது. ஆனால், சில குழந்தைகள் "சொகுசு" பிடித்தவர்களாக இருக்கும். அவர்களுக்குப் பாலின்மேல விருப்பமிராது. அவர்களைத் திருப்திப்படுத்தவேண்டும். அவர்களுக்கு நெஸ்டோமோல்ட் கொடுத்துப்பாருங்கள். இரு தேக்கரண்டிகள் நிறைய நெஸ்டோமோல்ட் எடுத்து ஒரு கிளாஸ் பாலில் கரைத்து அவன் குடிப்பதைக் கவனியுங்கள். மிக விருப்பமுடன் குடித்துவிடுவதோடு, மறுமுறையும் சாப்பிடுவதற்கு எப்பொழுதும் ஆவலுடையவனாக இருப்பான்.




# நெஸ்டோமோல்ட்

சம்பூரண மோல்டெட் மில்க்

ஒரு நெஸில்ஸ் தயாரிப்பு

கத்தோலிக்க பெற்றோரே! இதோ கைகண்டபலன்
இலாபத்தைக் கண்டும் இனித் தாமதம்வேண்டாம்

## கரையூர் விவாக இலாபநிதிச் சங்கம்

1950-ம் ஆண்டு தை, மாசி, பங்குனி மாதங்களின் இலாபஉபகரிப்பு.

| அங்கத்தவரின் பெயர் | இடம் | அங்கத்தனராய் இருந்த வருஷம் | கட்டிய தொகை ரூ. ச. | எடுத்த தொகை ரூ. ச. |
|---|---|---|---|---|
| தவிதுப்பிள்ளை மிக்கேல் | பருத்தித்துறை | 10 | 112-80 | 230-37 |
| மாட்டீன் சூசைமுத்து | வலித்தூண்டல் | 11 | 124-50 | 286-00 |
| பாவிலுப்பிள்ளை நத்தாலி | வலித்தூண்டல் | 10 | 104-70 | 226-00 |
| சவிரிமுத்து பறுணாந்து | மாரிசன்கூடல் | 6 | 67-60 | 125-90 |
| சவிரிமுத்து சவீனம் | புதுக்குடியிருப்பு (முல்லைத்தீவு) | 6 | 63-00 | 104 00 |
| பிலிப்பு அன்னம்மா | பருத்தித்துறை | 7 | 71-40 | 150-00 |
| அதிரியான் அந்திரேயப்பு | ஆரிப்பு | 6 | 61-50 | 105-80 |
| கணபதி யக்காசு | அல்லைப்பிட்டி | 8 | 85-80 | 175-90 |
| அந்தோனி யோசேப்பு | யாழ்ப்பாணம் | 7 | 75-00 | 153-80 |
| அந்தோனிப்பிள்ளை சந்தியாப்பி. | ஆனைக்கோட்டை | 6 | 64-20 | 102-75 |
| விருசு சவிரிமுத்து | எழுவைதீவு | 7 | 69-50 | 135-00 |
| சவிரிமுத்து மதலேனம் | கொண்டடித்தெரு | 12 | 133-90 | 350-39 |
| தவிது வலோரியாம்பிள்ளை | பாஷையூர் | 9 | 92-10 | 210-20 |
| தவிது ஞானப்பிரகாசம் | இளவாலை | 9 | 96-60 | 200-00 |
| லோப்பு மோசேஸ் | ஊறணி | 7 | 70-60 | 140-00 |
| அருளானந்தம் அந்தோனிப்பி. | புதுமைமாதாகோவில் யாழ்ப்பாணம் | 7 | 75-90 | 150-19 |
| செபமாலை அன்னம்மா | புதுக்குடியிருப்பு (முல்லைத்தீவு) | 7 | 64-50 | 135-00 |
| வயித்தி அந்தோனி | இளவாலை | 8 | 81-40 | 160-00 |
| V. Joseph கனகசுந்தரம் | சுண்டிக்குளி | 8 | 89-90 | 175-00 |
| யோசை திரேசம்மா | குருநகர் | 12 | 133-20 | 325-47 |
| A. லூயிஸ் லம்பேட் | வங்கலை | 7 | 79-80 | 141-87 |
| நசரேத் அருளப்பு | வங்காலை | 6 | 65-30 | 105-40 |
| மனவலபிள்ளை மிக்கேல் | அடப்பன் ரோட் | 12 | 134-10 | 320-08 |
| பீற்றர் ஞானப்பிரகாசம் | 4-ம்குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் | 9 | 94-80 | 216-00 |
| செபஸ்தியாம்பி. சந்தியாப்பி. | பாஷையூர் | 8 | 82-50 | 163-00 |
| யேக்கப் சவிரிமுத்து | ஸ்ரேசன்ரோட் | 10 | 113-00 | 225-00 |
| Mrs. மொனிக்காவஸ்தியாம்பி. | டேவிட்ரோட் | 8 | 87-80 | 170-02 |
| சூஸைப்பிள்ளை மரியம்மா | கோவிற்குடியிருப்பு (முல்லைத்தீவு) | 6 | 68-90 | 105-00 |
| வயித்தி முடியப்பு | மயிலிட்டி | 7 | 77-90 | 140-00 |

## 1949-ம் ஆண்டின் 46-ம் இலக்கச் சுற்றுநிருபம்.

உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளின் முகாமைக்காரர்களுக்கும் அரசினர் பாடசாலைகளின் தலைமைஆசிரியர்களுக்கும்

இல. M. E. 860
வித்தியா கந்தோர்,
கொழும்பு, 9-12-1949.

### பாடசாலைத் தோட்ட, கைப்பணிப் போட்டி, 1950.

கீழே கொடுக்கப்பட்ட சில மாற்றங்களைத்தவிர, 1949-ம் ஆண்டில் நடத்தியவாறே 1950-ம் ஆண்டிலும் பாடசாலைத் தோட்ட, கைப்பணிப்போட்டி நடத்தப்படும். அரசினர் பாடசாலைகளுக்கான ஒழுங்குச்சட்டத்தின் 122-ம் பிரிவின்படியும் உதவிநன்கொடைபெறும் சுவபாஷா இருபாஷா பாடசாலைகளுக்கான ஒழுங்குச்சட்டத்தின் 67-ம் பிரிவின் படியும் பாடசாலைத் தோட்டங்களுக்கு வெகுமதிகள் அளிக்கப்படும். தோட்டச் செய்கைக்கு நிலமிருக்கின்ற சகல பாடசாலைகளும் போட்டியிற் பங்குபற்றவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

2. பாடசாலைகள் வித்தியாதரிசிமார்களின் வட்டாரங்களின்படி வகுக்கப்பட்டுப் பின்வரும் பரிசுகள் அவைகளுக்கு வழங்கப்படும்:—

வட்டாரப் பரிசுகள்

| | 1-ம் பரிசு | 2-ம் பரிசு |
|---|---|---|
| (a) பாடசாலைத் தோட்டங்கள் | ரூ. 25-00 | ரூ. 15-00 |
| (b) கைப்பணி (வீட்டுப்பணி உட்பட) | ரூ. 25-00 | ரூ. 15-00 |

#### பிரிவுப் பரிசுகள்

மேற்கூறியவைகளுடன் நெற்செய்கைக்கு ஒவ்வொரு பிரிவுக்கும் இருபரிசுகள் வழங்கப்படும். 1-ம் பரிசு ரூ. 30-00, 2-ம் பரிசு ரூ. 20-00

3. வெகுமதிகள் அளிப்பதிற் பின்வரும் விஷயங்கள் கவனிக்கப்படும்:—

(a) பயிர்ச்செய்கை நடத்தும் நிலத்தின் பரப்பு.
(b) மண்ணைப் பாதுகாப்பதற்குக் கையாண்ட முறைகள்.
(c) பயிர்ச்செய்கையில், குறிப்பாக மாற்றுப் பயிர்ச் செய்கையிலும் பசளையிடுவதிலும் கையாண்ட முறைகள்.
(d) பாடசாலைத் தோட்டங்களின் அழகை விருத்திசெய்தற்கு எடுக்கப்பட்ட வழிவகை.
(e) அந்த வருடத்தில் விளைபொருட்கள் விற்றுப் பெற்ற தொகை.

பாடசாலைகள் பரிசுபெறத் தகுதிபெறுவதற்குக் குறைந்தது அரைஏக்கர் நிலமாவது பயிர்செய்யப்படவேண்டும்.

4. ஒவ்வொரு போட்டிப்பிரிவுக்கும் குறைந்தது 6 பிரவேசப்பத்திரங்களாவது இருந்தாலன்றிப் பரிசுகள் வழங்கப்படமாட்டா.

5. தலைமைஆசிரியர்கள் தாங்கள் பங்குபற்றக் கருதுகின்ற பிரிவுகளின் பெயர்களைக் குறித்துத் தங்கள் பிரவேசப் பத்திரங்களை உரிய வட்டார வித்தியாதரிசிக்கு 1950-ம் வருஷம் ஏப்றில்மாதம் 30-ந் திகதிக்குமுன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பவேண்டும்.

6. பரிசுப்பணம் பாடசாலைகளின் தொழில்முறை வேலையை அபிவிருத்திசெய்வதற்காக ஆயுதங்கள், தோட்டக் கருவிகள், ஆடுமாடு முதலியன வாங்குவதற்குத் தலைமைஆசிரியர்களுக்கு அளிக்கப்படும். அரசினர் பாடசாலைகளின் விஷயத்தில், பரிசுகள் வழங்கப்பெற்ற தலைமைஆசிரியர்கள் கிடைத்த பரிசுத் தொகையையும் அதை எவ்வாறு உபயோகிக்கக் கருதுகின்றனர் என்பதையும் உரிய வித்தியாதிகாரிக்கு அறிவிக்கவேண்டும். தலைமைஆசிரியர்கள் பணத்தை உபயோகிக்கமுன்னர், தாம் உபயோகிக்கக் கருதும் முறைகளுக்கு வித்தியாதிகாரியின் அங்கீகாரத்தைப் பெறல்வேண்டும். உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளின் தலைமைஆசிரியர்கள் தங்கள் கருத்துக்களை அங்கீகாரத்துக்கு முகாமைக்காரருக்குச் சமர்ப்பிக்கவேண்டும். அங்கீகரிக்கப்பட்ட முறையில் பணம் செலவுசெய்யப்படுகின்றதோவெனக் கவனிக்குமாறு முகாமைக்காரர்கள் கேட்கப்படுகின்றனர்.

எம். எவ். டி. எஸ். ஜயரத்ன,
பதில் வித்தியாதிபதி.

## நாளு சங்கதிகள்

— மைசூர் மகாராஜாவுக்கென்று பிரான்சிலே பூலோன் என்னுமிடத்திலுள்ள தொழிற்சாலைஒன்றில் ஓர்புதியகார் கட்டப்பட்டுவருகிறது. பிகோனி-பலாஸ்ச் என்றகம்பெனியே அதனைக் கட்டுகின்றது. அதிகம்நவீனமாதிரியாக நிர்மாணிக்கப்பட்ட இந்தக் காரைக் கட்டிமுடிக்கஏற்படும் செலவு 80,000 ரூபா வரையிலாகும். மழைகாலத்துக்கென்று ஓர்குடையும்இதிலே அமைக்கப்படுகிறது. மற்றும்பல நவீன வசதிகளையும் இதுகொண்டுள்ளது.

— இந்தியாவிலிருந்து அடுத்து நிகழும் வைகாசிமாதம் 14-ந் திகதியன்றும் ஆகாயமார்க்கமாய் யாத்திரைக் கோஷ்டிஒன்று ரோமாபுரி செல்ல ஆயத்தப்படுகின்றது. இந்தக்கோஷ்டி அம்மாசம் 18-ந் திகதி அர்ச். பேதுருவானவர் மகாஆலயத்தில் நடந்தேறும் அர்ச்சியசிஷ்டபட்ட வைபவத்திற்குச் சமுகமாயிருக்கும்.

— சப்மறின்களாகிய நீர்மூழ்கிகளைத் தாக்கி நிர்மூலமாக்கத்தக்கனவும், அதிகதூரத்துக்குப் பறந்துசெல்லக் கூடியனவுமான வெடிகுண்டுவிமானப் படைகளை இருபதிலிருந்து முப்பதாகவும், டிஸ்திரோயர்களின்தொகையை 140-இல்இருந்து 170 ஆகவும் அடுத்த பன்னிருமாசங்களிலே அதிகரிக்கச் செய்ய அமெரிக்கவரசின் கடற்படை திட்டம்போடுகின்றது.

— நாணயமடிக்குஞ்சாலைகளாய் உலகிலுள்ளசிலவற்றில் ஒன்றாகிய ஐதிராபாத் நிசாம்மன்னரின் நாணயசாலையை இம்மாசம் 1-ந் திகதியுடன் இந்தியஅரசாங்கம் எடுத்துக்கொண்டது. அன்று முதல் இந்தியகுடியாசுள் சமஸ்தானங்களின் பொருளாதாரம் முழுவதும் ஒன்றுக்கப்பட்டமையைத்தொடர்ந்தே இவ்விதம்செய்யப்படலாயிற்று.

— ஆர்ஜென்ரீனாவிலே சென்ற 7-ந் திகதியன்று இரவு றையோடிஜனேய்ரோ தலைநகரிலிருந்து விக்ரோறியாவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பிரயாணறெயில்வண்டி ஒன்று ரங்குரு ஆற்றுப் பாலத்திலிருந்து ஆற்றுள்விழுந்தமையாலே 120பேர் சீவமோசம்அடைய, வேறு நூறுபேர் காயமடைந்தார்களெனச் செய்தி எட்டியிருக்கிறது. இதிலே சென்றபிரயாணிகள் விடுமுறைகாரணமாகத் தலைநகரிலிருந்து வெளியூர்களுக்குச் சென்றவர்களாம்.

— எகிப்திலே கம்யூனிஸத்தை எதிர்த்துப் போராடுதற்கென்று ஓர் விசேஷ அரசாங்கபகுதி அமைக்கப்பட்டிருப்பதாக அத்தேச உள்நாட்டு மந்திரியார் அறிவித்திருக்கின்றார். இப்புதியபகுதியானது அபாயகரமான பொதுவுடைமைவாதத்தைக் கட்டுப்படுத்தும்விஷயமாய் மறு தேசங்களின் பொலிசருடனும், சர்வதேச சங்கங்களுடனும் நெருங்கியதொடர்பைக் கொண்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூதுசென்ற சூசைமாதவன்

[ "தேம்பாவணியை" ஆதாரமாகக்கொண்டு எழுதியது. ]

(முன்தொடர்ச்சி)

தேன்பொதுளும் கனிதீஞ்சொல்
 தெளிபயன் கேட்(டு) அவன் ஏந்தும்
கான்பொதுளும் மலர்வாகை
 கண்(டு) உண்ட நயம்பெருகி
ஊன்பொதுளும் குலத்(து) இம்மாண்(பு)
 உண்டோஎன்(று) உளம்வியப்ப
வான்பொதுளும் வரத்தோனை
 வணங்கினரார் ஒருங்(கு)அன்னார்

தேன்நிறைந்த கனிபோலும் சூசைமாதவன் சொன்ன இனியசொல்லின் தெளிந்தபயனையும்கேட்டு, அவன் கையில் ஏந்திய வாசனைநிறைந்துகமழும் பூங்கொடியையுங்கண்டு, அங்கேயிருந்தயாவரும் கொண்டஇன்பம் மிகுந்து ஊன்நிறைந்த உடலைக்கொண்ட ஈனமனுக்குலத்துக்கு இத்தகைய பெருமைஉண்டாமோஎன்று உள்ளத்திலே அதிசயப்பட்டு, வானுலகின்நிறைந்த வரங்களைப்பெற்ற சூசைமாதவனை எல்லாரும் ஒருப்படவணங்கினார்கள்.

ஆரணனே ஆரணஞ்சேர்
 கொழுகொம்பே அரி(து) உவப்பக்
காரணனே கண்(டு) அணைத்த
 கைத்தாதை யே அருளால்
பூரணனே நாம்விழைந்த
 பொழு(து) அடைந்தாய் இன்பமலி
வாரணனே தவத்(து) ஆசைக்
 கரைகண்டாய் வரத்தவனே

அதன்மேல் அப்பிதாக்கள் சூசையைவணங்கிச் சொல்லுகின்றார்கள்: வேதவடிவே! வேதம்ஊன்றிப்படரும் கொழுகொம்பே! மிகவும்களிகூர ஆதிகாரணனாகியகடவுளைக் கண்ணாரக் கண்டு மார்பிலேநின்றஅணைத்த கைத்தாதையே! அருளால்நிறைந்தவனே! நாமெல்லாம் காணவிரும்பிய காலத்தை அடைந்தாயே! இன்பம்நிறைந்த பெருங்கடலாகி, தாங்கள் செய்ததவத்தால் மற்றவர்கள் தேடியடையாத பாக்கியத்தை நீயேபெற்று வரமடைந்த மாதவத்தனாகித் தவத்தின் ஆசைக் கரையைக் கண்டாயே.

முக்காலம் காட்டும்ஒளி
 முகவிளக்காம் தவத்தொடுநாம்
அக்காலம் காண்மறைவில்
 ஆங்குரைத்த நாதனைநீ
இக்காலங் காட்டினையே
 ஏந்தினையே வளர்த்தனையே
மெய்க்காலங் காட்டியவான்
 வேந்தன்நிலை விளம்பென்றார்

மேலும் அப்பிதாக்கள் சொல்லுவார்கள்: முக்காலங்களையும் ஒருங்கே தெளிவாகக்காட்டும் ஒளிபொருந்திய திருவிளக்காகத் தவத்தைக்கொண்டு நாம் அக்காலத்திலே மறைவில்கண்டு, சொல்லால் வருமென்று அன்றுகாட்டியநாதனை இக்காலத்தில் வந்தானென்று கையாற்காட்டினையே, ஏந்தினையே, வளர்த்தாயே, மெய்யின்காலத்தைக் காட்டவந்த வானரசாகிய நரதேவனின் தன்மையை எமக்கு உரைப்பாயாக என்றார்கள்.

நோய்ஒக்கும் அவர்க்(கு) இன்பம்
 நனித்தஉயிர் மருந்(து)ஒக்கும்
தீஒக்கும் புரையார்க்கே
 சீதம்ஒக்கும் புயல்ஒக்கும்
வீஒக்கும் வடிவத்தால்
 வியன்தயையால் கடல்ஒக்கும்
தாய்ஒக்கும் தாதைஒக்கும்
 சகத்(து)எங்கும் அத்திருவோன்

மனுவாகஅவதரித்த திருநாதன், நோய்கொண்ட யாவர்க்கும் இன்பம்பயந்து நல்லுயிர்தரும் மருந்தைஒத்தவன். தீயைப்போன்றுசுடும் தீவினைகொண்ட யாவர்க்கும் குளிர்படப்பெய்யும் மேகத்தைஒத்தவன். தான் எடுத்தவடிவினால் மதுமலர்முகையை ஒத்தவன். செய்கின்றபெருந்தயையால் கரையில்லாத கடலை ஒத்தவன். உலகிற்கெல்லாம் ஒருதாய், ஒருதகப்பனை ஒத்திருப்பவன்.

மீன்ஒக்கப் பாவஇருள்
 விலகமிளிர் விழிகொண்டான்
கான்ஒக்க மறை உமிழக்
 கமழ்கமல வாய்கொண்டான்
தேன்ஒக்கத் துயர்க்கைப்புச்
 சிதைப்ப இனி(து) உரைகொண்டான்
வான்ஒக்கக் கவின்காட்ட
 மலர்வதன நலங்கொண்டான்

மேலும் அத்திவ்வியநாதனே பாவத்தினால் உண்டான இருள்விலகிநீங்க நட்சத்திரம்ஒப்ப விளங்கும் கண்களைக்கொண்டவன். வாசனையின்தன்மையினாலே வேதநூலை உமிழும்படிக்கு நறுமணம்வீசுகின்ற கமலவாயைக் கொண்டவன். கசக்கும்துயர்களைப்போக்க இனியதேனைஒத்த உரைகளைக்கொண்டவன். வானுக்குஒப்பான அழகினைக்காட்ட மலர்ந்தஅழகிய முகத்தைக்கொண்டவன்.

# மூன்றாவது உலகயுத்தம்

கடந்தபத்துவருடகாலமாக உலக மக்கள் அடைந்துவரும் கஷ்டநஷ்டங்கள் இம்மாத்திரமன்று. இவைகள் என்று நீங்கும்? உய்வடையுங்காலம் என்று வரும்? என வியாகுலமடைந்து நிற்கும் இச்சந்தர்ப்பத்தில் மூன்றாவது உலகயுத்தம் என்றபேச்சு மிகவும் வேகமாக அடிபடத் தொடங்கிவிட்டது. பத்தாவது நூற்றாண்டு ஆரம்பமானபோது உலகத்துக்கு அந்தம் வரப்போவதாக யாவரும்நம்பி அச்சமடைந்தனர். அப்போதையபயத்திலும் இப்போது உலகம்அடையும் அச்சம் மிகக்கூடியதாகும். இன்னும் பத்துவருடங்கட்கு மூன்றாவது உலக மகாயுத்தம் ஆரம்பமாகாது தடுக்கப்படின், பின்னர் அது ஒருபோதும் ஏற்படாதெனநம்பலாம்.

இந்தக்கொடிய யுத்தத்தைத்தடுக்க எல்லா நாட்டினர்க்கும், சாதியினர்க்கும் முழுவிருப்பம். ஆனால், என்ன செய்வதென அறியாது இடர்ப்படுகின்றனர். பரஸ்பரம் ஒருவர்மீது ஒருவர் அவநம்பிக்கையடைந்து யுத்தஆயத்தங்கள் வேகமாகச் செய்கின்றனர். இதற்குக் காரணம் என்ன? பலத்தில் குறைந்தால் தம்மை மற்றையோர் என்றும் ஆக்கிரமிப்பர் என்றபயந்தான். செல்வம்நிறைந்து முன்னேற்றமடைந்த நாட்டினர் அமெரிக்காவுடன் சேர்ந்துநிற்கின்றனர். சிறிய வறியநாட்டினர் ரூஷியாவினைத்துணைக்கொள்கின்றனர். எனவே, அமெரிக்காவினை அண்டிநிற்கும் நாடுகள் விருத்திபெற்றுச் செல்வநிலையை அடையுமென்பதும், ரூஷியாவினைத் துணையாகவுள்ள நாடுகள் வறுமையும் தாழ்மையும் அடையுமென்பதும் இதனாற் பெறப்படுகின்றது.

********************

## பேட்றண்ட் றசல்

********************

அடுத்தாற்போல் வரவிருக்கும் மகாயுத்தம் இதுவரையும் மனிதசமூகம் எப்போதாவத் அடையாத முறையில் மிகக்கொடியதும், பயங்கரமுமாயிருக்கும். எனதுமனம் ஒன்றையே இலக்காக நோக்குகின்றது. ரூஷிய அரசின் கொள்கையும், அரசியல்முறையும் உலகில் பரக்கக்கூடுமோ என்பதுதான். இப்போது விவாதமுறையில் பேச்சுகளாலும், எழுத்துகளாலும் நடத்தப்படும் யுத்தபோக்கை நோக்குமிடத்து ஒருவிஷயம் வெளியாகின்றது. நாம் வறுமையை மேற்கொண்டு தாழ்மையாகநின்று தொண்டாற்றுவது உலகத்தைச் செழிக்கபபண்ணுவதற்கெனக் கம்யூனிஸ்த கட்சியினர் கூறுகின்றனர். ஆனால், அவர்கள் இப்போது ஆடம்பரத்தை மேற்கொள்ளும் வாழ்க்கையும், அரசாங்கமும் தமது சத்துராதிகள் என்கின்றனர். வறுமையில் ஆழ்ந்து வசதிகளைப் பெறாமல் இருப்போர் இக்கட்சியில்சேர்ந்தால் புரட்சிகளைக் கொண்டுவரலாம்; தமது சத்துராதிகளைத் தண்டிக்கலாமென எண்ணுகின்றனர். நீதியைப்பெறாது நட்டமும் துயரமும் அடைந்தோர் தமது குறைகளைநீக்க இதுதான் தருணமென நினைக்கின்றனர். தமது குறைகட்குக் காரணர் யாரென்பதை அறிந்துவிட்டதாக எண்ணுகின்றர்.

தமதுஎண்ணங்களைப் புரட்சிகளால்—தேவைப்படின் பலாத்காரத்தால்—கொண்டுவருவதே ரூஷியரின் அடிப்படையானகொள்கை. அன்றேல் ட்ரொட்ஸ்கியின்கட்சியைக் கொடுமையாக நசிக்கவேண்டியதில்லை. எல்லாவிடங்களிலும் எப்போதும் இந்தத்தந்திரம் வாய்க்குமா? ஊளபகி ரிற்றோ போன்றவர்கள் பலநாடுகளிலும் இருக்கின்றார்கள். இப்போது சீனாவில் அதிகாரத்துடன் வெற்றியடைந்துவரும் கம்யூனிஸ்தர்கள் ரூஷியாவிலிருந்துதான் கட்டளைகளை எதிர்பார்ப்பாரா? அன்று, உக்கிரேன் மாகாணத்தில்

## அர்ச். சூசையப்பர் திருநாள்
## அறிக்கை

கொழும்பு, கொச்சிக்கடை, அர்ச். அந்தோனியார் ஆலயத்தில் அர்ச். சூசையப்பரின் அடைக்கலத்திருநாள் நிகழும் 30-4-50 ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படும். அதற்கு முந்திய திருவிழாக்கள் 21-ந்திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 29-ந்திகதி சனிக்கிழமைவரை தினமும் காலை 6 மணிக்குத் திவ்வியபூசையும், மாலை 6-30 மணிக்குச் செபமாலையும், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதமும் நடந்தேறும். 30-ந்திகதி காலை 7-30 மணிக்குத் திருநாட்பாடற்பூசையும், அதனைத் தொடர்ந்து ஆலயத்தினுள் அர்ச். சூசையப்பரின் திருசசுரூபசுற்றுப்பிரகாரமும் நடைபெறும். குறித்தநாட்களிலே விசுவாசிகளும், விசேஷமாய்ச் சபைஅங்கத்தினர்களும் திவ்வியபூசை கண்டும், தேவநற்கருணை பெற்றும், மற்றும பத்திமுயற்சிகளிற் பங்குபற்றியும் அர்ச். சூசையப்பரின் நல்லாசியைப் பெற்றுக்கொள்வார்களாக!

அர்ச். சூசையப்பர் நன்மரணசபைக்
காரியதரிசி

—சாதாரண ஆகாயவிமானிகள், இராணுவ ஆகாயவிமானிகளின் சர்வதேச யாத்திரைஒன்று அடுத்தவைகாசிமாதத்தின் இரண்டாவது வாரத்திலே றோமாபுரிக்கு நடைபெறவிருக்கின்றது. இத்தாலியசேனையின் பிரதம விசாரணைக்குரவரான மொஞ். கார்லோ பெறேறோ அவர்களின் ஆதரவிலே இந்த யாத்திரை நடந்தேறும்.

—இற்றைக்கு 150 வருடங்களுக்கு முன்னே அமெரிக்க ஐக்கியதேச சமஷ்டி அரசாங்கம உதயமாயிற்று. இந்த உதயத்தின் ஞாபகார்த்தமாக ஏழுமாதகால உதயத்தின் விழாக்கொண்டாட்டம்ஒன்று சென்ற 16-ந்திகதி வாஷிங்டன்நகரில் ஆரம்பமாகியிருக்கிறது.

ரூஷிய அரசினர்க்குமாறுகத் துவேஷங்கள் கிளம்பிவிட்டன. ரூஷியாவுடன் உண்மையான சமாதானத்தைப் பெறுவது என்றும் இயலாதவிஷயம். ரூஷியாவை வழிப்படுத்துவதாயின் யுத்தம் வந்தேயாகவேண்டும். அதுவரையும் ரூஷியாவிலும்பார்க்க யுத்தஆயத்தங்கள்செய்து இராணுவபலத்தைப் பன்மடங்கு அதிகரித்துநிற்பதே செய்யவேண்டியது. புதியசந்தர்ப்பங்கள், மாற்றங்கள், கொள்கைகள் தோன்றும் வரையும் பொறுத்திருப்பதன்றி வேறு செய்யக்கூடியது யாது?

உலகசமாதானம் உண்டாகி மக்கள் மனதில் அமைதியும் ஆறுதலும் ஏற்படவேண்டுமாயின் முதலாவதாக, சர்வாதிகாரி ஸ்ராலின் மரணமாக வேண்டும். கிழக்குஐரோப்பியநாடுகள் சுயாதீனமாகநடக்க வசதிபெற வேண்டும். ரூஷியவிஞ்ஞானசாஸ்திரிகள் தமது இஷ்டப்படி நடக்கச் சுதந்திரமடையவேண்டும். இது ஒருபுறமாக, மேற்குஐரோப்பிய நாட்டினரும், அமெரிக்கரும் மிகவேகமாக யுத்த ஆயத்தங்கள் செய்யவேண்டும். அணுக்குண்டு, சலவாயுக்குண்டு என்பனவற்றை நன்குவிருத்திசெய்ய வேண்டும். வறியசிறிய நாடுகட்குப் பணவுதவி, ஆளுதவி, உபகரணவுதவி என்பனவற்றைத் தாராளமாகவழங்கி அவைகளை மேனிலைக்குக் கொண்டுவரவேண்டும். பொருளாதாரம், சமுதாயவாழ்க்கை என்னும் விஷயங்களை ரூஷியாவுடன் ஒப்புநோக்கிப் பிரசாரஞ்செய்தல் வேண்டும். கடைசியாக, சுதந்திரம் பெற்ற எல்லாநாட்டினரும், சாதியினரும் சொற்பவித்தியாசங்களை மறந்து, உலகநன்மைக்காக ஒற்றுமையாக நின்று, அக்கிரமங்களை எதிர்க்கவேண்டும். அப்படிச்செய்யின் உலகயுத்தம் தோன்றுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெங்காயம்—மிளகாய்

வெண்காயப்பயிருக்கு, அதுவளருங் காலத்திற் குளிரும், முற்றிவிளையுங் காலத்தில் வரட்சியும் வேண்டியதாகும். நீர்ப்பாசனஒழுங்குகளுள்ள இடங்களில் ஈரமாயிருக்கக்கூடியதாயும், வடிகால்முறைக்கு ஏற்றதாயுமுள்ள செழிப்பான இருவாட்டிமண் வெண்காயச் செய்கைக்கு உகந்தது. இப்பயிருக்குச் சுண்ணக்கற்றாள்பூமி மிக விசேஷமானது. ஏக்கருக்குப் 10 தொன் வீதம் கூட்டெருப் போடவேண்டும். ஆடுமாடு பட்டி அடைத்தல் நலம். நிலத்தைஉழுது, மண்ணைப்பண்படுத்திப் பாத்திகள் அல்லதுவரம்புகள் கட்டவேண்டும். நடும் ஒவ்வொரு பூட்டின் மேல் நாலிலொருபாகத்தையும் முற்றுசவெட்டி, வெட்டுண்டபாகம் நிலமட்டத்திற்குமேலே சிறிது நிற்கக்கூடியதாய் ஆறுஅங்குல இடைவெளியுள்ள வரிசைகளில் நாலுஅங்குல தூரத்திற்கு ஒவ்வொருபூடாக நடவேண்டும். ஒரு ஏக்கருக்குப் 16 அந்தர்பூடு தேவையாகும். பாத்தியின் மேல்மண்ணைச் சமயத்துக்குச்சமயம் கிண்டுதல் நன்று. தேவைக்கேற்றபடி நீர்பாய்ச்சவேண்டும் களைகளைப்பிடுங்கவேண்டும். மூன்று மாதங்களில் வெண்காயம் கிண்டும் பருவமடையும். கிண்டி எடுத்ததும் செதில், இலைகள் உதிர்வதற்காகப் பூடுகளை நிழலிற் சிலநாட்களுக்குப் பாவி வைக்கவேண்டும். அதன்பின் வேர், செதில், இலை, தண்டு முதலியவற்றை நீக்கி, பூட்டைச்சுத்தப்படுத்தவேண்டும் ஒருஏக்கரின்விளைவு 4—5 தொன் சுத்தப்படுத்தப்பட்ட வெண்காயமாகும். காற்றோட்டமுள்ள அறையிலேயே தட்டுகளில் வெண்காயம் பரவப்படவேண்டும். அல்லது கண்ணறைச்சாக்குகள், கூடைகள் முதலியனவற்றிற் போட்டுத் தொங்கவிடவேண்டும்.

வருடம் ஒன்றுக்கு இலங்கைக்கு வேண்டியமிளகாய் 2,40,000 அந்தர். இதனைப்பெற 60,000 ஏக்கரில் மிளகாய் உண்டுபண்ணவேண்டும். வரண்ட பிரதேசங்களுக்கு மிளகாய் மிக வாய்த்தபயிராகும். அரைறாத்தல் மிள்காய்விதையை 360 சதுர அடி மேடையில் விதைத்தால் ஒருஏக்கர் நடப்போதுமான நாற்றுகளைப் பெறலாம். கன்றுகளைச் செவ்வனேவளர்க்கக்கூடியதாய் மேடைகளை அமைக்கவேண்டும். போதிய மாட்டெரு கூட்டெரு முதலிய பசளைகளைப்போட்டு மேடைகளை நன்கு பண்படுத்தவேண்டும். நாற்றுகள் இரண்டுவாரப் பருவமடைந்ததும் அவற்றிற்கு நவச்சார கந்தகைப் (Sulphate of Ammonia) பசளையைத் தண்ணீரிற்கரைத்து (வீதம்—ஒருஅவன்சை ஒருகலனிற் கரைத்து 50 சதுரஅடிகளிலுள்ள பயிருக்குத்) தெளிப்பதுநலம். மூன்றும் வாரத்திலும் இப்படிப் பசளை இடுவது விசேஷம். நான்குவாரங்களில் கன்றுகள் நடுகைப்பருவமடையும். மும்மூன்று அடிகளுக்கப்பால் நிலையம் போட்டு, ஒவ்வொருநிலையத்திலும் இவ்விரண்டுகன்றுகள் நடவேண்டும். நட்டபின் மழையில்லாவிட்டால் கன்றுகளுக்குத் தண்ணீர்வார்க்கவேண்டும். மூன்றும்வாரத்தில் மண்ணைக் கிண்டி, களைபிடுங்கி ஒரு ஏக்கருக்கு ஒருஅந்தர்வீதம் நவச்சார கந்தகை உரம்போடவேண்டும். பயிர்நட்டு ஒரு மாதம்முடிந்ததும் கன்றுகள் பூக்கும். இரண்டரை மாதமானதும் அவை காய்க்கும். வியாபார முறைகளை அறிந்து காய்மிளகாய்களைப்பிடுங்கி விற்கலாம். அல்லது அவற்றைப் பழுக்கவிட்டு, பழங்களைப்பிடுங்கிக் காயவைத்து செத்தல்மிளகாய் தயாரிக்கலாம். ஏக்கர்விளைவு 4—8 அந்தர் செத்தல்மிளகாயாகும். தூத்துக்குடி மிளகாய் நல்லகாரமுள்ளது. அதனையே விருத்திசெய்யவேண்டும்.

(க. தொ. வி.

## நாவாந்துறை
## சனசமூக நிலையம்

### 2-ம்பருவ பொதுக்கூட்டம்

நாவாந்துறை சனசமூகநிலைய 2-ம் பருவ பொதுக்கூட்டம் 12-4-50 புதன் கிழமை பிற்பகல் 6 மணியளவில் நிலையத்தலைவர் திரு. கி. சூசைப்பிள்ளை அவர்கள்தலைமையில் சென்மேரீஸ்ஐக்கியசங்கக் கயிற்றுக்கைத்தொழில் பெண்பாடசாலை மண்டபத்தில் செபத்துடன் ஆரம்பமானது. காரியதரிசி அவர்களால் 2-ம்பருவ பொதுஅறிக்கை வாசிக்கப்பட்டது. தலைவர் முன்னுரையின்பின் மதுரைத்தமிழ்ப் பண்டிதர் திரு. க. மயில்வாகனம் அவர்களால் "நாம் முன்னேறும் வழி" என்னும் விஷயம்பற்றியும், வேலணை அரசினர் மத்தியகல்லூரி அதிபர் திரு. A. K. கந்தையா, B. A. அவர்களால் "தனிமனிதனும் சமூகமும்" என்னும்விஷயம்பற்றியும், ஆசிரியர் நா. நவரட்னம் அவர்களால் "சேவாசங்கத்தின் நோக்கம்" என்னும் விஷயம்பற்றியும் பேசப்பட்டன. திரு. ம. ஆசீர்வாதம் அவர்களால் நன்றியுரை கூறப்பட்டபின் சிறுமிகளால் கும்மியும், சிறுவர்களால் கோலாட்டமும் அடித்துக்காட்டப்பட்டுச் செபத்துடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

நீ. எஸ்தாக்கி, காரியதரிசி.

## புதுக்குடியிருப்புத் தபால்

எங்கள் வண. கட்டளைக்குரவர், தலைமைஆசிரியர் V. J. அருமைநாயகம் ஆதியோரின் தூண்டுதலால் ஆசிரியர் S. T. செல்லப்பாஅவர்களின் தலைமையிலே எம்பாடசாலையில் வாலிபர் முன்னேற்றச்சங்கம்ஒன்று நிறுவப்பட்டு நிர்வாகசபை அங்கத்தவர்கள் தெரியப்பெற்றனர். இந்தநிர்வாகசபைஅங்கத்தவர்களும், தளராதஊக்கம்படைத்த வாலிபர்களும் தங்கள்நாட்டை முன்னேறச்செய்யவேண்டுமென்னும் நோக்குமுடையவர்களாய் அதற்கேற்ற சாதனங்களைக் கையாண்டு வருகிறார்கள். ஒற்றுமையும், ஒத்துழைப்பும்பூண்ட இவ்வாலிபர்கள் தங்கள்நேரத்தையும், பணத்தையும் பாராது இரவுபகலாய் ஓர் வாசிகசாலை கட்டமுயற்சிசெய்து கட்டிடவேலையை ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்கள் கையிட்டவேலை சித்தியடைவதற்கு வண.கட்டளைக்குரவரும், பலரால் நன்குஅறியப்பெற்ற பெரியான் மிக்கேல் என்னும் வயோதிபரும் தம்மாலான உதவிகள்புரிந்து ஊக்கப்படுத்தி வருகிறார்கள். இவ்வாலிப சகோதரர்களின் ஒத்துழைப்பாலும், ஒற்றுமையாலும் புதுக்குடியிருப்புக் கத்தோலிக்கசமூகம் முன்னேற்ற முற்றுப்புத்துயிர்பெற்று விளங்குவதாக.

பா. ஞானப்பிரகாசம்

## தபசுகால
## ஞானஒடுக்கம்

கொட்டாஞ்சேனையிலே தமிழில் வழமையாகப் போதிக்கப்பட்டுவரும் ஞானஒடுக்கம் சென்றமாதம் 19-ம் திகதி மாலை 6-30 மணியளவில் வண. எல். ஜே. அகஸ்ரீன் சுவாமியவர்களால் தொடக்கப்பெற்று 26-ந்திகதி முடிபெய்தியது. இந்நாட்களிலே காலையில் அர்ச். அந்தோனியார் ஆலயத்தில் பூசை, தியானமும், மாலையில் சந்தலூசியா ஆலயத்தில் செபமாலை, சிலுவைப்பாதை, பிரசங்கம், சற்பிரசாத ஆசீர்வாதமும் நடைபெறலாயின. இத்தமிழ் ஞானஒடுக்கம் தொடங்குமுன் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் சந்தலூசியா ஆலயத்தில் பிரபல குருப்பிரசாதிகளால் ஞானபோதகம் செய்யப்பட்டது. திரள்திரளாய்ச் சனங்கள் குழுமினார்கள். அதேவிதமாகத் தமிழிலும் வண. அகஸ்தீன் சுவாமியவர்கள் அழகான, ஆணித்தரமான போதனைகளைசெய்து, சாதனைகளால் நாம் எப்படிப் போதிக்கவேண்டும் என விபரமாயும், தெளிவாயும் உதாரணங்களால் சுட்டிக்காட்டினார். தமிழ்ப்பேசும் ஏராளமான கத்தோலிக்கர் இந்தஞான ஒடுக்கத்துக்குச் சமுகமளித்தனர். அநேகமாய் மாலை 9 மணிக்குச் சந்தலூசியா ஆலயத்திலிருந்து சனங்கள் ஞானஒடுக்கத்தால் திரும்புவார்கள். ஒரேசனத்திரள். விசேஷமாகக் கல்பொட்டைவீதியாலும், ஐம்பாட்டா வீதியாலும் அநேகயார்தூரத்துக்குத் திரள்ளானஆட்கள் கருமம்தெரியாதவர்கள் இதென்ன விசேஷம் என்று கேட்டேஅறிந்தார்கள். ஆண்டவரின் அருளால் இந்தஞானஒடுக்கத்தில் கலந்துகொண்டஅனைவரும் அவரது திருச்சித்தத்தின்படி தங்கள் வாழ்நாளைக் கழிக்கமுன்வருவாராக.

B. A. S. Rajah

## திருஇருதய வாசிகசாலை
## ஐந்தாவதுவருடப் பொதுக்கூட்டம்

குருநகர், திருஇருதய வாசிகசாலையின் ஐந்தாவது ஆண்டு நிறைவுவிழா இம்மாதம் 9-ந் திகதி ஞாயிறுவாரம் சாயந்தரம் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்தின்பின் சென்ஜேம்ஸ் ஆண்பாடசாலைமண்டபத்தில் மகாவந். உதவி மேற்றிராணியார் ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர்அவர்கள் தலைமையில் ஆரம்பமாகி நடந்தேறியது. ஆண்டவரவர்களை வண. கட்டளைச்சுவாமியாரும், திருஇருதயசபையாரும் வரவேற்று உயர்ஆசனத்தில் அமரச்செய்து மலர்மாலைசூட்டினர். கூட்டம் செபத்துடன் ஆரம்பமாகியது. நல்வாசினையாகச் சுவிசேஷத்திலிருந்து ஓர்பகுதி வாசிக்கப்பட்டது. பின்னர் வாசிகசாலையின் வருடாந்தஅறிக்கை வாசித்து அரங்கேற்றப்பட்டது. திரு. L. கிறேஷியன், திரு. G. B. அன்ரனி, செவாலியர் S. அருளானந்தம், நகரசபைஅங்கத்தவர் திரு. P. M. யோண், கட்டளைக்குரவர் வண. A. லெபோன் சுவாமியார் ஆகியவர்களால் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. மகாவந். மேற்றிராணியாண்டவர் எழுந்து, வாசிகசாலையை இன்னும் முன்றேற்ற வேண்டுமெனவும், அதற்குத் தம்மாலான உதவிகள் செய்வதாகவும், இப்போதைக்கு ஓர்தொகைப் புஸ்தகங்களை உதவப்போவதாகவும் கூறினார். மேலும் ஊரின் முன்றேற்றத்துக்காகவும் தாம் உழைக்கத் தயாராயிருப்பதாகவும், அதற்குத் தம்முடன் ஊரவர்கள் ஒத்துழைக்குமாறும் கேட்டுக்கொண்டார். ஈற்றில் சமுகமானோர் யாவர்க்கும் நன்றியுரை கூறப்பட்டுச் செபத்துடன் கூட்டம நிறைவேறியது.

— நிருபர்

## நாடு சங்கதிகள்

—சீனாவிலேசென்றவருடம்தொடங்கிய பஞ்சத்தாலே நாலுகோடி சீனமக்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக உத்தியோகமுறையிலே சீனக்கம்யூனிஸ்த அரசாங்கம் அறிவித்திருக்கிறது. 2 கோடிஏக்கர் விஸ்தாரமான தேசப்பரப்பில் உண்டாயிருக்கும் இப்பஞ்சத்தால் 70 லட்சம்பேர் அதிகம் பரிதாபமான நிலைமையில் இருக்கின்றார்களாம.

—விமானங்கள்மூலம் சாமான்களை ஏற்றிப்பறிப்பதற்கான தேவை அதிகப்பட்டுவருவதாலே பிரித்தானியில் இதற்கென ஓர்புதுமாதிரியான ஆகாய விமானம் கட்டப்படுகிறது. இதிலே சாமான்களுக்கென்று 5,740 கனஅடி வெளி இருக்குமாம். 36 அடிநீளம் 10 அடிஅகலம் 10 அடி உயரமான ஓர்பஸ்வண்டியைத்தானும் இதில் கொண்டுசெல்லலாம். 15 தொன் சாமானுக்குமேல் இதுகொண்டுசெல்லத்தக்கது.

—தங்கள்நாடுகளையும், வீடுவாசல்களையும் விட்டுச்சென்று பிறநாடுகளில் இல்லிடமற்ற அகதிகளாகத் தற்போது உலகமுழுவதிலும் எட்டுக்கோடிபேர் இருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. இவர்களில் 9 லட்சம்பேர் பலஸ்தீனாவிலிருந்தும், 8 லட்சம்பேர் கிறீசிலிருந்தும்வெளியேறினவர்களாம்.

—மத்தியசீனாவின் சிலபகுதிகளிலே பெற்றார் தங்கள்பிள்ளைகளை ஏலத்தில் விற்றுவிட்டுப் பின்னர் தற்கொலை செய்துகொள்வதாக ஹொங்கோங்கிலிருந்து அறிவிக்கப்படுகிறது. இதற்குக்காரணம் வசந்தகாலத்தில் ஏற்பட்டபெருவெள்ளத்தாலே பயங்கர பஞ்சம் உண்டாயிருப்பதேயாம்.

—யப்பானிய பிலிம்கம்பெனிஒன்று முற்றிலும் மிருகங்களையே நடிகர்களாகக்கொண்ட ஓர்சலனபடத்தை விரைவிலே தயாரிக்கவிருக்கின்றது. இதற்கென அது ஜேர்மன் ஆட்டிடையரின் நாய்ஒன்றையும் ஓர்நடிகராகத் தெரிந்திருக்கிறது. இப்படத்தில் பன்றிகள், குரங்குகள், ஆமை, காகம், நரி, பூனை, நாய்கள், குதிரைகள்ஆதியபல மிருகங்களும் நடிக்கவிருக்கின்றன.

— பரிசுத்தபாப்பரசர் சென்ற 12-ந் திகதி இந்தியாவைச்சேர்ந்த அக்ருநகர் அதிமேற்றிராணியாரான எவான் ஜெலிஸ்ராவன்னி ஆண்டவருக்கும், பரிசுத்தஸ்தானிடமாக இந்திய பிரதிநிதியாய் இருந்துவருகின்ற டக்றர் திருஜ்லால் புவாலாபாய் தேசாய் அவர்களுக்கும் பிரத்தியேகபேட்டிகள் அளித்திருப்பதாக வத்திக்கானிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது.


### சத்தியவேத பாதுகாவலன்
### Supplement to the Catholic Guardian

வியாழக்கிழமைகளில் பிரசுரமாகும்

**கையொப்ப விகித**

முற்பணமாகக் கட்டவேண்டும்

| தமிழ் | | இலங்கை | தமிழும், இங்கிலிசும் | |
|---|---|---|---|---|
| வருஷம் | 5-50 | | வருஷம் | 10-50 |
| அரை வருஷம் | 3-00 | | அரை வருஷம் | 5-50 |
| | | மற்றும் தேசங்களுக்கு | | |
| வருஷம் | 6-00 | | வருஷம் | 11-00 |
| அரை வருஷம் | 3-25 | | அரை வருஷம் | 5-75 |

விளம்பரங்களுக்கும், கையொப்பங்களுக்கும், மனேஜர் அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம் என்று எழுதவேண்டும்.

மற்றும் விஷயங்கள்பற்றி, பத்திராதிபருக்கு எழுதவேண்டும்.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residng at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, April 20 1950.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org